ஜோதிடத் தீபம்

மலர் 17 இதழ் 6

SL
R659.11, MAVD
M77.17.6.
18772

954

Regd. No. M. 916.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை.

அக்ஷய வருஷம் - பங்குனி மீ.

ஸம்புடம் 17.] [ஸஞ்சிகை 6

பத்ராதிபர்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 MAY 1927
MADRAS

விஷய ஸூசிகை.


| | | | |
|---|---|---|---|
| 1. | மோக்ஷதர்மமும் ஜகதுபகாரமும்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர் | ... | 177 |
| 2. | மோக்ஷத்திலும் பாரதந்த்ர்யமே:— வேதாந்த சிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசார்யர் | ... | 184 |
| 3. | சமயம்:—ஸ்ரீ. திரு. அ. இராமகிருஷ்ண சடகோப தாஸர் | ... | 191 |
| 4. | ஸ்ரீ கீதாபாஷ்ய விசாரம்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர் | ... | 196 |
| 5. | கடிதங்கள்:— ... | ... | 202 |
| 6. | புஸ்தக விமர்சம்:— ... | ... | 202 |
| 7. | பத்ராதிபரின் குறிப்புகள்:— ... | ... | 204 |
| 8. | ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர் | ... | 33 |
| 9. | ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:— ... | ... | 33 |


*MARCH 1927.*

வருஷச் சந்தா ரூ. 3—0—0.] ஸஞ்சிகை 1 க்கு அணா 6.

பாதி விலை ! **ஒரு மாதம் வரை** பாதி விலை !!




**அசல் விலை ரூ. 14.**

**பாதி விலை ரூ. 7.**

22-காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம். 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். இக்கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பி வைக்கப் படும்.

**ஸ்வான் ஹவுஸ், தபால் பெட்டி, நெ. 508,**
**பி. டி. மதராஸ்.**

---

# இனாம்! இனாம்!!

இச்சமயம் தவறாதீர்கள் !!




சிலநாளைக்கு மாத்திரம் !!

உலகமெங்கும் ப்ரஸித்திபெற்ற தாரா லீவர் ளைக்கட் லீவர் கடியாரம் விலை ரூ. **5-0-0** உள்ளது. உள் டையலின்மேல் ஐந்துவருஷம் உத்திரவாதம். காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக்கூடியது. இக்கடியாரத்தை ஆர்டர் செய்கிறவர்களுக்கு ஒரு "C" டைம்பீஸ் இனாமாகக் கொடுக்கப்படும். இச்சமயம் தவறாதீர்கள். சில நாளைக்கு மாத்திரம். கடியாரம் ஒன்றுக்கு விலை ரூ. **5-0-0** முந்துங்கள்.

**விலாசம்.—காப்டன் வாச் கம்பெனி,**
**தபால்பெட்டி 265 மதராஸ்.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 MAY 1927
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 17.] அக்ஷயஸூ, பங்குனிமீ [ஸஞ்சிகை 6

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேநவத்யா

[ ஸ்ரீ பாகவதம். 1·9·23 ]

ஸ்ரீ:

## மோக்ஷ தர்மமும் ஜகதுபகாரமும்

(ஸ்ரீ: வாஸுதேவாசார்யர்.)

---

லோகத்தில் ஜநிக்கும் ஜந்துக்களுள், தமது த்ருப்தியையும் லாபத்தையும் அநாதரித்துப் பிறருடைய த்ருப்திக்காகவும் லாபத்திற்காகவும் ஜீவித்து வரும் ஜந்துக்களே மிக உத்க்ருஷ்டங்கள். நமது மத விஷயங்களான க்ரந்தங்களெல்லாம் அம்மாதிரியான ஜீவநத்தையே புகழ்ந்து பேசுகின்றன.

"ச்லோகார்த்தேந ப்ரவக்ஷ்யாமி யதுக்தம் க்ரந்தகோடிபி: ।
பரோபகார: புண்யாய பாபாய பரபீடநம் ॥"

186770.

[கணக்கற்ற க்ரந்தங்களால் உபதேசிக்கப்படும் தர்மஸூக்ஷ்மத்தை நான் ஒரு வாக்யத்தில் சுருக்கிச் சொல்லுகிறேன்: பரோபகாரம் என்பது புண்யம்; பரபீடநம், பாபம்] என்னும் நீதி ஸர்வலோகம் எல்லாருக்கும் தெரிந்ததே. ஸ்வார்த்த பரர்களாயுள்ள ஜநங்களை ஜகத் கொஞ்சமேனும் பஹுமதியாமல் நிந்த்யமாக இகழ்ந்து பேசுவதையும், கேவலம் உதரம்பரிகளென்று வெறுப்பதையும் யார் அறியார்? 'நான்' என்பதும் 'என்னுடை

யது' என்பதும் மஹத்தான கர்ம பந்தத்திற்குக் காரணமாகின்றனவென்றும், அந்த அஹங்கார மமகார த்யாகத்தைச் செய்தவனே ஈஶ்வரனுடைய க்ருபைக்குப் பாத்ரமாகிறானென்றும் நமது வேதாந்தங்களெல்லாம் போதிக்கின்றன. நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில், ஜீவனுடைய ஸ்வரூபம் பரஶேஷத் தன்மையே என்றும், அந்தப் பரஶேஷத்வம் பாகவத ஶேஷத்வ பர்யந்தம் வளர்கின்றது என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது, நாம் செய்வது எல்லாம் ஈஶ்வரனுக்கும் ததீயர்களுக்கும் பெருமையை ஆவஹிக்கின்றதே தவிர, நமக்கு அதனால் பெருமையாவது ஸந்தோஷமாவது ஒன்றும் ஏற்படுகிறதில்லை என்பதுதான்; இதனால், பரார்த்தமாக இருப்பதே நமது ஸ்வரூபமென்று சொன்னதாயிற்று. ப்ரதி தினம் ஜப காலங்களிலும் ப்ராப்தாவினுடைய அநுஸந்தானத்தைச் செய்யும் பொழுதெல்லாம், நமக்கு இவ்விதம் ஸ்வாபாவிகமாக இருக்கும் பாரார்த்யத்தையே நாம் அநுஸந்தானம் செய்ய வேண்டுமென்று நமது ஆசார்யர்கள் உபதேஶித்திருக்கிறார்கள். இப்படி நாம் ஸ்வதந்த்ரர்களல்லரென்றும் ஸ்வார்த்தமாக இருப்பவரல்லரென்றும் கேவலம் வார்த்தையில் மாத்ரம் சொல்லிக்கொண்டிராமல், அநுஷ்டானத்திலும் அநுபவத்திலும் அது ஏற்பட வேண்டுமென்றே அதை ஸாதித்துக் கொள்வதற்கு ஸாதநமாகப் பல உபாயங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு இந்த அர்த்தம் பஹு ப்ரகாரமாகவும் பஹுமுகமாகவும் நமது சாஸ்த்ரங்களில் வற்புறுத்தப்பட்டிருக்கையில், நமது ஹிந்துமதம் கேவலம் ஸ்வார்த்த பரதையையே போதிக்கிறதென்றும், நம்மால் மிக உயர்ந்ததாகக் கொண்டாடப்படும் ஸந்யாஸ தர்மங்களும் மோக்ஷத்தைத் தேடும் மார்க்கங்களும் ஸ்வார்த்தத்திலேயே பர்யவஸிக்கின்றனவென்றும் சொல்வது ந்யாயத்திற்கு ஒத்ததாகுமோ?

'ஆனால் ஸ்வார்த்தத்துக்காகப் பாடுபட்டு வரும் ஸந்யாஸிகளை ஹிந்து மதஸ்தர்கள் கௌரவித்து வருகிறார்களே. அவர்கள் ஸம்ஸாரத்தில் வருந்தும் ஆர்த்தர்களை ஸ்வல்பமேனும் ஆதரியாமல், கேவலம் தம்முடைய கர்ம பந்தத்தின் நிவ்ருத்தியை மாத்ரம் தேடிக்கொண்டே வீடு வாசல்களை விட்டுவிட்டு ஓடவில்லையோ? கஷ்டப்படும் ஜநங்களுக்கு அவர்கள் என்ன உபகாரத்தைச் செய்கிறார்கள்? அஶக்தர்களான ப்ரஜைகள் கஷ்டப்படும் காலத்தில் தாமும் அவர்களுடன் கூட இருந்து அவர்களுடைய கஷ்டங்களை நிவ்ருத்திக்கத் தம்மால் இயன்றமட்டும் முயன்று, தமது லாபத்தைக் கொஞ்சமேனும் கவனியாமல் நின்றாலன்றோ அவர்களைப் பரோபகாரிகளென்று நாம் கொண்டாடலாம்? மோக்ஷமார்க்கத்தை உபதேஶிக்கும் நமது ஶாஸ்த்ரங்களெல்லாம், நாம் இந்த ப்ரபஞ்ச விஷயங்களிலிருந்து விரக்தியை அடைய வேண்டுமென்றும், அதற்காக விஷயங்களின் ஸந்நிதானத்தை வர்ஜித்துக் காடு



முதலிய இடங்களுக்குப் போய் இந்த்ரியங்களை அடக்கிக்கொண்டு ஆத்ம ஸ்வரூபத்தையே த்யாநம் செய்யவேண்டுமென்றும் உபதேஶிக்கவில்லையா? இது ஜகதுபகாரமாகுமோ?' இத்யாதியாகச் சில ஆக்ஷேபங்களைச் சிலர் செய்வர். உண்மையாகவே பாஶ்சாத்ய வித்வான்களுட் சிலர் இம்மாதிரி ஆக்ஷேபங்களைச் செய்து, 'ஹிந்து மதம் என்பதில் ஜகதுபகாரம் (Social service) என்பது வற்புறுத்தப்படவில்லை; அது கிறிஸ்துவ மதத்திலேயே முக்ய தர்மமாகக் கொண்டாடப்பட்டிருக்கின்றது' என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இதன் தத்வத்தைச் சற்று விசாரிப்போம்.

லோக ஸ்திதி என்பது தர்மம் மேலிட்டு அதர்மம் அடங்கி இருத்தலைப் பொருத்து நிற்கின்றது. லோக ஸ்ருஷ்டிக்கும் அதன் லயத்திற்கும் போல அதன் ஸம்ரக்ஷணத்திற்கும் ப்ரதாந ஹேதுவாயுள்ள பகவான்,

"𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍 𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥"

[தர்மம் க்லாநியை அடைந்து அதர்மம் தலையெடுக்கும் பொழுதெல்லாம், நான் தர்மத்தை நிலைநிறுத்தும் பொருட்டு அவதரிக்கிறேன்] என்று ஸ்ரீ கீதையில் விவரித்திருக்கிறான். அநுபவத்திலும், தர்மத்திற்குக் குறைவு ஏற்படுமிடங்களில், ஜநங்கள் கடுமையான கஷ்டங்களுக்குப்பாத்ரமாகி ஆத்யந்திக நாஶமடைவதை நாம் பார்க்கிறோம். இதில் நமக்குள் யாதொரு பிந்ந அபிப்ராயமும் இல்லை. ஆனால் அந்தத் தர்மம் என்ன என்பதை விசாரிக்கும் பொழுது நமக்குள் அபிப்ராய பேதம் ஏற்படுகின்றது. வேதத்தில் நம்மால் செய்யப்படவேண்டியவை என்று விதித்துள்ள கர்த்தவ்யங்களை லோபமில்லாமற் செய்வதும், நம்மால் செய்யத்தகாதவை என்று விலக்கியுள்ள நிஷித்தமான கர்மங்களைச் செய்யாமல் இருப்பதுமே தர்மமென்பதும், இதற்கு விபரீதமாக இருப்பதெல்லாம் அதர்மமென்பதும் நமது கொள்கை. இந்த்ரிய வ்யாபாரங்களின் உபரதியையும் விஷயங்களின் அஸந்நிதானத்தில் வஸிப்பதையும் தர்மமென்று வேதம் சொல்லியிருக்கும் பக்ஷத்தில், தர்மத்தை அநுஷ்டிப்பதால் ஜகத் ஸ்திதி ஏற்படுமாகையால், வேத விஹிதங்களை அநுஷ்டிப்பது லோக ஸ்திதிக்கு உபகாரகமாகும் என்பது ஸித்திக்கின்றது. அந்தத் தர்மத்தை அநுஷ்டிப்பவர்கள் லோகோபகாரிகளாகார் என்று சொல்வது தர்க்கம் அறியாதவர்கள் சொல்லும் வார்த்தையே.

நம்மைவிட வேறு அபிப்ராயம் கொண்டிருப்பவர்கள், இது விஷயமாகச் சொல்வது என்னவென்றால், 'லோக ஸ்திதி தர்மாநுஷ்டானத்தைப் பொருத்தது என்பது உண்மையே; ஆனால் வேதத்திற் சொல்லப்பட்டிருப்பதெல்லாம் தர்மமென்றும் அதில் நிஷேதித்திருப்பவைகளைச் செய்வது அதர்மமென்றும் நாம் ஏன் ஒத்துக்கொள்ள வேண்டும்? யுக்திகளைக்கொண்டு குணதோஷ

விசாரம் செய்து, எவை எவை ஜகத்திற்கு ஶ்ரேயஸ்கரமென்று நமக்கு விளங்குகின்றனவோ அவைகளை அநுஷ்டிப்பதே தர்மமென்றும் அதற்கு விபரீதமாக விளங்குமவையெல்லாம் அதர்மங்களென்று மன்றோ விவேகிகளான நாம் அங்கீகரிக்க வேண்டும்? அப்படி யுக்தி விசாரம் செய்தால், கஷ்டப்படும் ப்ரஜைகளின் ஶ்ரமத்தை நமது ப்ரயத்நத்தால் நிவ்ருத்தி செய்வதே தர்மமென்று ஸித்திக்குமே தவிர, அவர்களைக் கஷ்டப்பட விட்டு விட்டு நாம் ஸந்யாஸதர்மத்தை அநுஷ்டித்துக்கொண்டு மோக்ஷத்தைத் தேடிப் போவது தர்மமென்று ஸித்தியாது. வேதம் இதற்கு விருத்தமாக உபதேஶித்தால் அது அதர்மத்தை உபதேஶிக்கின்றது என்றே சொல்லவேண்டும்' என்பதுதான்.

இது ந்யாய்யமே. விவேகிகளான நாம், நமது விவேகத்தை ப்ரயோகித்தே இன்னது ஸாது இன்னது அஸாது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால், நமது விவேசந ஶக்தி ஸங்குசிதமென்பதையும், நாம் மோஹத்திற்குப் பாத்ரமாக இருக்கிறோம் என்பதையும் நாம் மறக்கக்கூடாது. ஒரு ஸமயத்தில் யுக்தி யுக்தமாகத் தோன்றுமவையெல்லாம் மற்றொரு ஸமயத்தில் யுக்திக்கு விருத்தமாகத் தோன்றுகின்றன. ஒருவனுக்கு எது ஶ்ரேயஸ்கரமென்று தோன்றுகின்றதோ அது மற்றொருவனுக்கு தோஷாவஹமென்று தோன்றுகின்றது. இவை அநுபவ ஸித்தங்கள். ஆகையால், நமது புத்தி பலத்தைக்கொண்டு தர்மாதர்ம நிர்ணயம் செய்ய யத்நிப்பது நமது விவேகத்திற்கு லக்ஷணமன்று. தவிரவும், கேவலம் த்ருஷ்ட பலத்தைக் கொடுப்பது மாத்திரம் தர்மமென்று நாம் அங்கீகரிக்கவில்லை. இந்தத் தேஹம் போன பிறகும் நமது ஜீவன் ஜீவித்திருக்கின்றதென்றும், அந்தக் காலத்திற்கு உரிய ஶ்ரேயஸ்ஸையும் நாம் தேடிக்கொள்ள வேண்டுமென்றும் நாம் அங்கீகரித்திருக்கின்றோம். அந்தக் காலத்தில் எது ஶ்ரேயஸ்கரம் எது ஶ்ரேயஸ்கரமன்று என்பதை யுக்திகளைக் கொண்டு நாம் அறிய முடியாது. ஆகையால், அதீந்த்ரியமாயுள்ள விஷயங்களில் யுக்தி விசாரத்தையே நம்பிநின்றால், நாம் வஞ்சிதராகி விடுவோம். அதீந்த்ரிய விஷயங்களில் ஶாஸ்த்ரமே நமக்கு ப்ரமாணமாக வேண்டும். ஆகையால், ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸை அடையவேண்டுமானால் நமது ஹிதத்தையே அநுஶாஸிப்பதான வேதத்தையும், பகவத்கடாக்ஷத்தால் த்ரிகால ஜ்ஞாநத்தைப் பெற்றுள்ள மஹர்ஷிகளாற் செய்யப்பட்டிருக்கும் ஶாஸ்த்ரங்களையுமே நாம் நம்பவேண்டும்.

நமது ஶாஸ்த்ரங்களும் ஸந்யாஸதர்மத்தை எல்லாருக்கும் விதிக்கவில்லை. விசித்ரமான இந்த ஸ்ருஷ்டியில், அதிகாரிகள் பலவகைப்பட்டவர்கள். அவர்களுள் மோக்ஷத்தை இச்சிப்பவர் மிகவும் மிதம். அவர்களுக்கு மாத்ரம் மோக்ஷ மார்க்கத்தை நமது ஶாஸ்த்ரம் விதிக்கின்றது. இந்த லோகத்தில்



காணப்படும் ஜநங்கள், பெரும்பாலும் போகங்களில் ஆசை யுள்ளவர்களாகவே இருப்பார்கள். அவர்களுக்கு மோக்ஷ மார்க்கம் அதர்மமேயாகும். அம்மாதிரியான அதிகாரிகள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்றும், அவர்களுக்கு எது தர்மமென்றும் ஶாஸ்த்ரங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. கஷ்டப்படும் ப்ரஜைகளுக்குத் தம்மால் இயன்றவரையில் த்ரவ்யத்தாலும் தேஹத்தாலும் வேறுவிதமாகவும் உபகரிப்பதே அவர்களுடைய முக்யமான தர்மம் என்பது அங்கு சொல்லப்பட்டிருப்பதிலிருந்து விளங்கும். இம்மாதிரி தர்மாதர்ம நிர்ணயத்தை அதிகாரிகள் காலம் தேஶம் முதலியவைகளைப் பர்யாலோசித்துச் செய்து, எவர் எவர்களுக்கு எது எது தர்மமாகுமென்று ஶாஸ்த்ரங்களைக் கொண்டு அறிந்து, ஒவ்வொருவரும் தம் தம் தர்மத்தைச் சரிவர அநுஷ்டித்து வந்தால், ஜகத்தின் ஸ்திதி அபிவ்ருத்தமாகும்; ஒவ்வொருவரும் தந்தம் ஶக்திக்கும் யோக்யதைக்கும் தகுந்தபடி ஜகத்தின் உபகாரத்தைச் செய்தவர் ஆவர் என்பது ஸித்தம்.

இந்த விஷயத்தில் மற்றுமொரு விசாரிக்கவேண்டிய அம்ஶம் இருக்கின்றது. கஷ்டங்களால் வருந்தும் ப்ரஜைகளுக்கு த்ரவ்யம் முதலானவற்றால் ஸஹாயம்செய்து அந்தக் காலத்தில் அவர்களுடைய கஷ்டத்தை நிவ்ருத்திக்க முயல்வது உபகாரம் ஆகும் என்பது உண்மையே. சிலவிடங்களில், அப்படி த்ரவ்யம் முதலியவற்றால் உபகரிப்பது, தாத்காலிகமாக மாத்ரம் கஷ்டத்தை நிவ்ருத்தி செய்து, பிறகு மறுபடியும் அவர்களைக் கஷ்டத்திற்குப் பாத்ரமாகும்படி விட்டுவிடக் கூடும். அம்மாதிரியான இடங்களில், அப்பொழுது மாத்ரம் கஷ்ட நிவ்ருத்தியைக் கொடுக்கக் கூடிய த்ரவ்ய ஸஹாயம் செய்வதைக் காட்டிலும், ஶாஶ்வதமாக ஒருபொழுதும் கஷ்டம் வாராதபடி பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஒரு யோக்யதா விஶேஷத்தை அவனுக்கு உண்டுபண்ணக்கூடுமானால் அந்த யோக்யதையை அவனுக்கு ஸம்பாதித்துக் கொடுப்பதே மிகச் சிறந்த உபகாரமாகு மன்றோ? ப்ரதிதிநமும் பிறருடைய அந்நத்தை எதிர்பார்த்திருப்பது அவத்யத்திற்கு ஹேது. கூடுமானால் ஸ்வயமே த்ரவ்யார்ஜநம் செய்து ஆத்ம போஷணம் குடும்ப போஷணம் முதலியவற்றை எக்காலமும் நடத்திக்கொள்ளும்படி ஒரு ஶக்தி விஶேஷத்தை ஸம்பாதித்துக் கொள்வதே சிறந்தது. ஆகையால், ஒருவன், ஏழைகள் விஷயத்தில் அம்மாதிரியான ஶக்தி விஶேஷ ஸம்பாதநத்திற்கு ஹேதுவாகும் ஒரு உபகாரத்தைச் செய்தால், அவனைத் தத்காலத்தில் அந்த ஏழைகளின் கஷ்டத்தை நிவ்ருத்திப்பிக்க முயலவில்லை என்னும் காரணத்தைக் கொண்டு மாத்ரம் பரோபகாரத்தில் நோக்கம் இல்லாதவனென்றாவது கடிந சித்தனென்றாவது ஸ்வார்த்த பரனென்றாவது சொல்வது ந்யாய்யமாகுமா? மோக்ஷமார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கும் நமது ஸந்யாஸிகள் அம்மாதிரியான ஶாஶ்வத உபகாரகர்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. அவர்களுடைய ஸத்தையே பெரி

யதான லோகோபகாரகம்; அவர்களுடைய ஸந்நிதானமே மிகுந்த ஶ்ரே யஸ்கரம்; அவர்களுடைய கண்ணுக்குப் பாத்ரமாவதே மஹத்தான க்ஷேமத்திற்குக் காரணம். தேஹத்தாலாவது வாக்கினாலாவது அவர்கள் ஒன்றும் செய்யாவிடினும், அவர்கள் வஸிக்கும் இடத்தில் வஸிப்பதும் அவர்களுடைய கடாக்ஷ பாத்ரமாவதுமே பலமான யோக்யதா விஶேஷத்தையும் ஶக்தி விஶேஷத்தையும் நமக்கு ஜநிப்பிக்கும்.

“ 𑌨 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌪𑌿 𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌃 𑌸𑍌𑌖𑍍𑌯𑍈𑌰𑍍𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑍍𑌯𑌪𑍋𑌹𑌤𑌿 ।
𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌿𑌮𑌪𑌿 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌯𑍋 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌜𑌨𑌃 ॥ ”

[ப்ரியன் என்று சொல்லப்படுமவன் அநிர்வசநீயமான விலையுயர்ந்த ஒரு த்ரவ்ய விஶேஷம்; ஏனென்றால், விலையுயர்ந்த ஔஷத விஶேஷங்களாகிற ரஸாயநங்களெல்லாம் உட்கொள்ளப்பட்டு ஜீர்ணமான பிறகே அவை தேஹத்திற்கு ஆரோக்யத்தைச் செய்கின்றன; இந்த ப்ரியனோவென்றால், பாஹ்ய வ்யாபாரமொன்று மின்றிக்கே, கேவலம் ஸந்நிதாநத்தினால் மாத்ரம் மஹத்தான ஸௌக்யங்களைக் கொடுத்து க்ரூரங்களான துக்கங்களை நிவ்ருத்தித்து விடுகிறான்] என்று கேவலம் ஒரு ப்ரியன் விஷயமாகப் பெரியோர்கள் சொல்லி இருக்கிறார்கள். மஹத்தான ஸாதுக்களாகவும் மிகுந்த பகவத் பக்தராகவுமுள்ள பெரியோர்களுடைய ஸாந்நித்யம் எவ்விதமான உபகாரத்தைத் தான் செய்யாது ?

“ 𑌯𑌤𑍍𑌰𑌾𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑍋 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑍋 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇 ।
𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌂𑌚𑌰𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌦𑍁𑌰𑍍𑌭𑌿𑌕𑍍𑌷𑌤𑌸𑍍𑌕𑌰𑌾𑌃 ॥

[எந்த ப்ரதேஶத்தில் மஹா பாக்யஶாலிகளான பகவத் பக்தர்கள் இருக்கிறார்களோ, அவ்விடத்தில் வ்யாதி துர்பிக்ஷம் திருடர்கள் ஒன்றும் நடையாடுவதில்லை] என்று சொல்லப்படும் வாக்யம் பொய்யாகுமோ? நல்லோர் இருக்கு மிடங்களில் மாஸம் மும்மாரி பெய்கிறதென்று லோகாநுபவமுள்ள வயோ வ்ருத்தர்கள் சொல்லி நாம் கேட்டதில்லையோ? இப்படி அவர்கள் இருக்கும் இடத்திற்கே ஒரு ஏற்றத்தைப் பகவான் அநுக்ரஹிப்பது உண்டானால், அவர்கள் தமது ப்ரார்த்தனையால் பகவானைக் கொண்டு ஜகத்திற்கு எந்த நன்மையை விளைவிக்கமாட்டார்? இப்படி உபகரிப்பதைவிட வேறு சிறந்த உபகாரமும் மற்றொருவரால் ஸம்பவிக்குமோ ?

இது மாத்ரமன்று. ஜகத்தில் ப்ரஜைகளுக்கு ஶ்ரேயஸ் என்பது இருவகைப்படும். இந்த லோகத்தில் அநுபவிக்கப்படும் ஶ்ரேயஸ் ஒன்று; பரலோகத்தில் அநுபவிக்கப்படும் ச்ரேயஸ் மற்றொன்று. ஸாமாந்யமாக இந்த ஜகத்தில் காணப்படும் உபகாரகர்கள் பெரும்பாலும் இந்த லோகத்து ஸம்பந்தமான ஶ்ரேயஸ்ஸையே தேடிக்கொடுப்பவர்கள். நமது ஸாதுக்களோ வென்றால், பரலோகத்து ஶ்ரேயஸ்ஸைத் தேடிக்கொடுப்பதில் நோக்கமுள்ளவர்கள். இந்த லோகத்திய ஶ்ரேயஸ் முழுவதும் ப்ராயேண காமக்ரோத வர்த்தகங்கள்; ஆகையால், அவை பர்யவஸாநத்தில் துக்ககரங்களாகவே இருக்கும். ஆத்மோஜ்ஜீவநத்திற்கு அவை உபகாரங்களாகா. வ்யக்திகளிடத்தில் ஐஶ்வர்யம் மதஹேதுவாகப் பரிணமிப்பதை எல்லாரும் பார்த்திருக்கலாம். அம்மாதிரியே, அநேக வ்யக்திகளடங்கியுள்ள ராஜ்ய பாகங்களிலும், ஐஹிக க்ஷேமம் எவ்வளவுக்கு எவ்வளவு அபிவ்ருத்தமாகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு லோபமும் மாத்ஸர்யமும் அதிகமாகி, நல்ல புத்தியை இழக்கும்படிக்கும் அக்ரமங்களில் ப்ரவேஶிக்கும்படிக்கும் அதனால் ஜகத்தின் க்ஷோபத்தையே உண்டுபண்ணும்படிக்கும் பரிணாமங்கள் ஸம்பவிக்கின்றன. பூர்வ காலத்திய ராஜ்யங்களின் சரித்ரத்தைப் படிக்குமவர்களுக்கு இது நன்றாகப் புலப்படும். உபபோகத்தால் காமங்கள் ஶாந்தி அடைகின்றன என்பது எவ்விடத்திலாவது எந்தக் காலத்திலாவது காணப்பட்டது உண்டோ? இப்படி ஸர்வ நாஶத்திற்கும் ஹேதுவாகும் ஐஹிக ஶ்ரேயஸ்ஸுக்கு உபகாரகர்களாக இருப்பவரைக் காட்டிலும், ஆத்ம ஸம்பந்தமான ஶ்ரேயஸ்ஸுக்கு உபகாரகர்களாக இருக்கும் நமது ஸாதுக்கள் போன்ற பெரியோர்களே பல மடங்கு சிறந்தவர்கள் என்று நாம் ஏன் சொல்லக்கூடாது?

இப்படி நாம் சொல்வதினின்று, கஷ்டப்படும் ஜநங்களுக்கு அந்தக்கஷ்டத்தை நிவ்ருத்திப்பிக்கும் உபகாரத்தைச் செய்யக்கூடாதென்று நாம் உபதேஶிப்பதாக நமது அபிமானிகள் எண்ணக்கூடாது. பரதுக்கங்களை நிவ்ருத்திக்க யாவச் சக்தி முயல்வதையே முக்யமான ஆத்ம குணமாக நமது பெரியோர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஒருவன் வ்யாதியினாலாவது தாரித்ர்யத்தினாலாவது கஷ்டப்படுகையில், அவனை ஔதாஸீந்யத்துடன் அநாதரித்துப் போவது பெரிய பாபம்தான். ஆனால், ஒருவன் ஜகத்தின் தத்வ ஸ்திதியை அறிந்து, அதனால் வைராக்யம் மேலிட்டு, ஆத்ம ஸாக்ஷாத்காரத்திலும் பகவத் பக்தியிலும் நோக்கமுள்ளவனா யிருக்கும்படியான பரிபாகத்தை அடைந்து விட்டால், அவன் இந்த ஜகத்திலுள்ள ஜநங்களோடு கலந்து உழலவில்லை யென்றும், அந்த ஜநங்களைக் கரையேற்றுவதற்கு வேண்டிய முயற்சியைச் செய்யாமல் தனது ஶ்ரேயஸ்ஸையே ஸ்வார்த்த பரனாகத் தேடிப் போகிறானென்றும் நாம் நிந்திப்பது ந்யாய்யமன்று என்று மாத்ரம் நாம் சொல்லத்துணிவோம். அப்படிப்பட்ட ஜ்ஞாநியின் மநோ பாவத்தையும் சேஷ்டிதங்களையும் நாம் அறிவதற்குக் கூட அஶக்தர். அப்படியிருக்க அவர் உபகாரம்செய்கிறார், செய்யவில்லை என்பது அஜ்ஞரான நமக்கு எப்படி விளங்கும்? நமது சிற்றறிவுக்குப் புலப்படும் விஷயங்களைக்கடந்து, அதற்கு அகோசரமாய்க் கணக்கற்ற பதார்த்தங்கள் இருக்கின்றன. அவைகளையும் ஸாக்ஷாத்கரித்து, ஜகதுபகாரத்தை உத்தேஶித்தே தர்மங்களை யதாயோக்யம் விதிக்கும் நமது மஹர்ஷிகளையாவது, அவர்களால் எழுதப்பட்டுள்ள ஶாஸ்த்ரங்களையாவது நாம் இகழ்ந்து பேசுவது நமது ஜ்ஞாநக் குறைவையே காட்டும்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# மோக்ஷத்திலும் பாரதந்த்ர்யமே.

(வேதாந்த சிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்.)

உலகத்தில் சற்றேறக்குறைய எல்லா ஜநங்களும், ஸம்ஸாரம் மிகவும் துக்கஜநகமா யிருக்கிறதென்றும் அதை எவ்விதத்திலாவது ஒழித்து மோக்ஷத்தைப் பெறவேண்டு மென்றும் கருதுகிறார்க ளென்றே காண்கிறோம். காரண மென்னவெனில், ஜீவாத்மாக்களுக்கு ஸம்ஸாரத்தில் அநாதியான புண்யம் பாபம் என்கிற கர்ம ப்ரவாஹாதீநமான தேவன் மநுஷ்யன் முதலிய நாநாவித சரீர ஸம்பந்த மேற்பட்டு அச்சரீர ஸம்பந்த மடியான ஜந்மம் ஜநந மரணங்கள் முதலிய நாநாவித துக்காநுபவம் அவர்ஜநீய மானபடியால் சரீரம் வேறு ஆத்மா வேறு என்ற விவேகம் பிறந்தவன் ஒரு க்ஷணமேனும் ஸம்ஸாரத்தி லிருக்க இசையமாட்டான்; ஏதாகிலும் ஒரு விதத்தில் இதை ஒழித்து இதிலிருந்து விடுபட்டுச் செல்வதே மேலானதென அவன் கருதக்கூடும். அவ்வித விடுதலையையே மோக்ஷமெனப் பொதுவில் கூறுவர்கள்.

'ஸ ஸ்வராட் பவதி, தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி' என்றிவை முதலிய சாஸ்த்ரங்களும், அவன் மோக்ஷ மடைந்ததும் ஸ்வதந்த்ர னாகிறா னென்றும், அவனுக்கு ப்ரதிபந்தகமாகிய கர்மஸம்பந்தம் கழிந்தவாறே எல்லா வுலகத்திலும் யதேச்சா ஸஞ்சாரம் ஸித்திப்பதாயும் கூறுகின்றன. இது மிகவும் பொருத்தமானது. தன்னிஷ்டப்படி ஸஞ்சரிக்க வேண்டிய தொரு ஜந்து, கூட்டி லடைக்கப்பட்டிருந்தால், அதற்கு அப்போது அக்கூடு தன்னிஷ்டப்படி ஸஞ்சரிக்கத் தடையாயும், அதிலிருந்து விடுபட்டவாறே அது தன் இயற்கையான ஸஞ்சாரத்திற்கு யாதொரு தட்டில்லாமலும் இருக்கும். அப்படிப்பட்ட கர்மபந்த நிவ்ருத்தியானது, பக்தி ப்ரபத்திகளில் ஒன்றால் ப்ரஸந்நனாகக் கூடிய சரண்யனுடைய அநுக்ரக விசேஷத்தால் ஜீவன் தன் சரீரத்தை விட்டுக் கிளம்பி அர்ச்சிராதி மார்க்கத்தாலே பரமபத மடைந்தது முண்டாகின்ற தாகையால், அப்பொழுது இவனுக்கு ஸ்வரூபாநுபந்தியான ஸர்வஜ்ஞதை முதலிய குணங்கள் ஆவிர்ப்பவிப்பதுடன் ஸம்பூர்ண பகவத் அநுபவமும் பிறந்து, தத்பரீவாஹமாக



ஸ்வாமி யுகந்த சேஷவ்ருத்தியாகிற கைங்கரியத்திலும் இவன் அழுந்துகிறான் என்றே விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்.

மதாந்தரஸ்தர்கள் பலரும் மோக்ஷத்தை வெவ்வேறு விதமான ரீதியில் அங்கீகரித்திருந்த போதிலும், பொதுவில் முக்தனானவனுக்குத் துக்கநிவ்ருத்தி பூர்வகமான ஸ்வாதந்த்ரிய முண்டாவதாகவே தென்படுகின்றது. இவ்விஷயத்திலும் 'ஸ ஸ்வராட் பவதி' முதலிய முன் உதாஹரித்த ப்ரமாணங்களே போதுமானவை.

இப்படியிருக்க நமது ஸித்தாந்தத்தில் மட்டும், ஸம்ஸார தசையில் யாவத் வஸ்துக்களும் பகவானுக்குச் சேஷபூதம் என்னுமாப்போல் மோக்ஷத்திலும் ஜீவர்கள் பகவத் பரதந்த்ரர்கள் என்று அங்கீகரிக்கக் காரணமென்ன? பாரதந்த்ர்யம் ஒழியவேண்டு மென்ற எண்ணத்தாலல்லவோ யாவரும் மோக்ஷத்தை விரும்புவது. ஸம்ஸாரத்தில் பாரதந்த்ர்ய மிருப்பது போல் மோக்ஷத்திலுமிருக்குமாகில், மோக்ஷமும் ஸம்ஸார துல்யமாகாதோ? ஒருவாறு மோக்ஷம் ஸம்ஸார விலக்ஷண மென்றாலும் பாரதந்த்ர்ய மென்பது ஸ்வதந்த்ர னாயிருக்கவேண்டியவனுக்குத் துக்க கோடியிலேயே சேரக் கூடுமன்றோ? உலகத்திலும், பரவசமாயிருத்தல் துக்க மென்றும் ஸ்வதந்த்ரமா யிருத்தலே ஸுகமென்றும் யாவருடைய அநுபவமா யிருக்கிறது. மஹாபாரதத்தில் "யார் ஸந்தோஷிக்கிறவன்?" என்கிற யக்ஷன் கேள்விக்குப் பதிலளிக்கையில் தர்மபுத்ரன் வாக்யம்

"பஞ்சமேऽஹநி ஷஷ்டே வா ஶாகம் பசதி ஸ்வே க்ருஹே ।
அந்ருணோ ஹ்யப்ரவாஸீ ச ஸ வாரிசர மோததே ॥"

என்று உள்ளது. இங்கு 'அப்ரவாஸீ' என்பதால் ஒருவனுக்கு ஏவல் தொழில் செய்பவனா யிருக்கலாகாது; அப்படியிருத்தல் துக்கம் என்றே அவர் தீர்மானமெனத் தெரிகிறது. மதாந்தரங்களில் இப்படிக்கில்லாமல் ஸ்வாதந்த்ர்யம் ஒப்புக்கொள்வதாகவே கூறப்படுகின்றது.

நமது சாஸ்த்ரத்தில் பரிசயக் குறைவாலோ, பரிசய மிருந்தும் கேட்குமவர்களுக்குத் தகுந்த பதில் சொல்ல முடியாமையாலோ, இவ்வாறு ஸந்தேஹிக்கின்றார்கள் பலர். அப்படியிருக்க ஆயுள்காலத்தில் முக்காலளவுக்கு மேல் பாஷாந்தரத்தையும் ப்ரத்யக்ஷ விஷயத்தையே போதிக்கின்ற சாஸ்த்ரங்களையும் படித்து, ஏதோ ஒருவித லௌகிக வ்ருத்தியை அவலம்பித்து இருக்குமவர்கள் சாஸ்த்ர விச்வாஸசாலிகளாக இருந்த போதிலும், இவ்விஷயத்தில் ஸ்வயமாகவோ அல்லது பிறர் மூலமாகவோ ஸந்தேஹம் உதித்தால் அவர்கள் திகைக்கவே நேர்கிறதென்பது அஸம்பாவிதமானதன்று, ...

அப்படிப்பட்டவர்களில் சிலர் இதை ஒருவாறு நிர்வஹிக்கப் பார்த்துக் கூடாமையால், அங்கங்கு சில ஸமயங்களில் அத்வைதிகளின் உபந்யாஸத்தில் சில அம்சங்களைக் கேட்டதாலோ எக்காரணம் பற்றியோ * இது நம்முடைய ஆழ்வார் முதலியவர்களால் புகவிட்ட விஷயமாயிருக்கலாமென்று சொல்லி அதற்கு ஆதாரமாக அத்வைத மதத்தில் இவ்வாறு ஒப்புக்கொள்வதில்லையென்றும், ஸகுணப்ரஹ்ம ப்ராப்தியில் இவ்வாறு அவர்கள் ஒப்புக்கொண்டாலும் அந்த முக்தி சாசுவதமல்லவென்றும், ஜீவன் ப்ரஹ்மமாகவே ஆய்விடுகிறான் என்ற முக்தி இக்காரணம் பற்றியே இதை விட மேலானதென அவர்களால் கருதப் படுகின்றதென்றும், அதுவே ஸ்வாதந்த்ரியத்திற்கு அநுகுணமாயிருக்கலாமென்றும் கூறுகின்றார்கள். மற்றும் சிலர், இதைத் தாங்களே ஸமர்த்தநம் செய்துவிடலாமென்று நினைத்து * 'நம் மதத்தில் ஜீவாத்மாக்கள் ஈசுவரனைவிட வேறுபட்டவர்களென்றும், அவ்வீசுவர பக்தி எப்போதுமிருக்கவேண்டியதென்றும், அதுவே உத்தாரக'மெனவும் ஒத்துக்கொண்டபடியால் அப்பக்திக்கு அநுகுணமாக ஒருபடி ஸ்வாதந்த்ர்யம் குறைக்கப்பட்டு ஈசுவர பாரதந்த்ர்யம் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது" என்று நிர்வஹிக்கப் பார்ப்பார்கள். இங்கு இரண்டாவது ஸமாதாநம் ஏறக்குறைய சரியாகவேயிருக்கலா மெனவும் அவர்களில் சிலருடைய தீர்மாநம்.

இதில் சாஸ்த்ர மறிந்தவர்களின் நுட்பமான கருத்தின் வேறுபாட்டையும், அதை நினைக்க நினைக்க உண்டாகும் மஹாநந்தத்தையும், அது ஸர்வ ஸஹ்ருதய ஹ்ருத்யமாயிருக்கிற தென்பதையும் மேலே விவரிப்போம். இங்கு கீழ், ஸமாதாநம் போல் சொல்லப்பட்டவை சரியாகவேயிருக்கக்கூடாதா வென்பதையும் சற்று விசாரிப்போம். 'மோக்ஷத்திலும் பாரதந்த்ர்யம் ஒப்புக்கொள்ளவேண்டுமென்பதை ஆழ்வார் புகவிட்டிருக்கலா'மெனச் சொல்லில், ஆழ்வாருக்கு முன் இவ்விஷயம் அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லையென்பதையும், வேதத்தில் இல்லாமையால் இவ்வம்சம் அவைதிகமாய் முடியுமென்பதையும் அங்கீகரிக்க வேண்டி வரும். இவ்வாறு இவ்விஷயம் அவைதிகமாய் நடுவில் நுழைக்கப்பட்டதென்பதை அங்கீகரித்தாலும், நமக்கு யாதொரு பாதகமுமில்லையென்று சரித்ர ஆராய்ச்சிக்காரர்கள் கண்டுபிடித்துக் கூறும் புது விஷயங்களைப் பார்த்து ஆநந்திக்கும் ஆதுநிக பண்டிதர்களின் நிலைமையிலிருந்து இதை அங்கீகரிப்பதானாலும், இவ் விஷயத்தை நடுவில் புகவிடவும் அதை அக்காலத்திய மஹான்கள் அங்கீகரிக்கவும் காரணம் எதுவாய் இருக்கலாமென்று சற்றுப் பராமர்சிக்கவேண்டும். ஒரு ஸம்-

* இங்கு ஸமாதானம் போல் சொல்லப்பட்டவை யெல்லாம் அவர்கள் சொல்லிக் கொள்ளும் [illegible]



ப்ரதாயம் சாஸ்த்ரார்த்தம் யுக்தியுக்தம் தானென்று விளக்கிக் காட்டி நிர்வஹிக்கத் திறமையில்லாமல் ஏதாவது ஒரு புதிய விஷயத்தைப் புகவிட்டாவது நிர்வஹிக்க வேண்டிய கட்டாயமிருக்குங் காலத்தில், ஒரு ஸமயம் இப்படிப்பட்ட விஷயத்தை இவ்வாறு புகவிட்டு இருக்கக் கூடும் என்று ஒருவாறு அது ஸமஞ்ஜஸமாகலாம். ஆனாலும் அப்படிப்பட்ட விஷயம் தங்களுக்கும் தங்கள் மதத்திற்கும் ஒரு சிறப்பையுண்டுபண்ண வேண்டியதாயிருக்கவேண்டும். இந்த பகவத் பாரதந்த்ரயமோ அப்படிப்பட்டதல்ல; அன்றியும் இப்பாரதந்த்ர்யத்தை அங்கீகரியாமலிருக்கும் வரையில் தங்கள் மதத்தில் யாதொரு ஆக்ஷேபத்திற்கும் இடமில்லை. இதை அங்கீகரித்ததல்லவோ மேற்கூறிய ஆக்ஷேபம் பிறந்தது. ஆகையால் தங்கள் மதத்திற்கு ஹாநியை விளைவிக்கக்கூடிய ஒரு அம்சத்தை, வேறு யாதொரு காரணமுமில்லாமலிருக்க, ஒருவர் இதைப் புகவிட்டாரென்றாவது அதை அக்காலத்திய மஹான்கள் அங்கீகரித்திருக்கக்கூடுமென்றாவது சொல்வது சாதுர்ய கார்யமாகாது.

இவ்விஷயத்தில் அவர்கள் சொன்ன யுக்திகளையும் சற்றுக் கவனிப்போம். ஜீவன் மோக்ஷ தசையில் ப்ரஹ்மமாகவே ஆய்விடுகிறானென்பது பற்றி அக்கொள்கை பாரதந்த்ரனாகவேயிருக்கிறானென்பதைவிட மேலான தசை என்றும் அப்பொழுதுதான் அவனுக்குப் பூர்ண ஸ்வாதந்த்ரயம் என்றும் சொல்வது உசிதமெனக் காணப்பட்டபோதிலும், நன்கு கவனிக்குங்கால் அதிலிருக்கும் தோஷங்கள் வெளியாகும். வேறு எவ்வகையாலும் அறியக்கூடாத விஷயங்களைப் போதிக்க சாஸ்த்ரமொன்றே போதுமான கருவியாகிறதென்பதை இங்கு மறக்கலாகாது. அச்சாஸ்த்ரமும் மோக்ஷ ஸ்வரூபத்தை இவ்விதமென்றே போதித்ததேயாகில் அதையும் யாரும் மறுக்கவும் முடியாது. ஆனால் சாஸ்த்ரத்தின் கருத்தையும் சற்று உற்றுநோக்கிக் கவனித்தால் இவ்விதமிருக்க முடியாதென்பது நன்கு விளங்கும். இவ்விஷயம் விஸ்தாரமாகச் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருப்பதால் அதை இங்கு அதிகம் விவரிக்காமல் இரண்டொரு யுக்திகள் மட்டுமே காட்டப்படுகின்றன. ஜீவனின் உண்மை ஸ்வரூபம் ப்ரஹ்மமாயிருந்தாலல்லது மோக்ஷத்தில் அவன் ப்ரஹ்மமாக ஆய்விடுகிறானெனச் சொல்ல முடியாது. அப்படிக்கு ப்ரஹ்மமே ஜீவதசையை ஒருக்காலடைந்திருக்குமாகில் அப்படி அது ஜீவனானதைக்குக் காரணம் யாது? அஜ்ஞாநத்தாலென்றால் நிர்த்தோஷமெனச் சாஸ்த்ரங்களில் கூறப்படும் ப்ரஹ்மமே அஜ்ஞாநத்தையடைந்ததாகச் சொல்லவேண்டி வரும். அது உசிதமன்று. ஜ்ஞாநஸ்வரூபமென்ற ப்ரஹ்மத்திற்கே அஜ்ஞாநமுண்டென்றால் அதைப் பின்னிட்டு நிவ்ருத்தி செய்ய யாரால் முடியும்? என்றிவை முதலிய கேவல பண்டிதர்களுக்குமே துர்விஜ்ஞேயங்களான யுக்திகள் ஸ்ரீபாஷ்யாதிகளில் விஸ்தாரமாயிருக்கின்றன. ஆகையால் சாஸ்த்ர

விரோதத்தை யறியாமல் மோக்ஷத்தில் ப்ரஹ்மமாகவே ஆய்விடுகிறான் என்பதும் அதைக் கண்டு அவர்கள் சொல்லும் மோக்ஷமே மேலானதெனக் கூறுவதும் பொருந்தமாட்டா.

இரண்டாவதாகச் சொன்ன ஸமாதாநமும் அவ்வளவாகப் பொருத்தமில்லாதது. ஜீவன் ப்ரஹ்மத்தைவிட வேறுபட்டவன் என்பதாலும் ஈச்வர பக்தியே மோக்ஷத்திற்கு ஸாதநமென்பதாலும் மோக்ஷத்திலும் பாரதந்த்ர்ய மிருக்கவேண்டுமோ? உலகத்திலும் ஒருவரை ஒருவர் ஆச்ரயித்துத் தமது காரியத்தைப் பூர்த்தி செய்துகொண்ட மாத்ரத்தால் கார்யமாகும் வரையில் அவனுக்கு அடங்கியிருக்க வேண்டுமே யல்லது, பின்னிட்டு எப்பொழுதும் அவனுக்குப் பரதந்த்ரனாகவே இருக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் காணவில்லை; பின் என்னெனில், அவனுக்குச் சமானமாயும் சற்று மேலாகவும் கூட இருக்கக் காண்கிறோம். ஆகையால் இதுவும் பொருத்தமான யுக்தியல்ல. சாஸ்த்ரக் காரர்களின் கருத்தை அடியொற்றி நோக்கினால் இதற்குக் காரணம் வேறு விதமாகக் காணப்படும். அதைப் பின்வருமாறு காணலாம்.

பாரதந்த்ர்யம் துக்கமென்பதற்கும் ஸ்வாதந்த்ர்யம் ஸுகமென்பதற்கும் காரணத்தை முதலில் கவனிக்கவேண்டும். ஸுகம் என்பதும் துக்கம் என்பதும் ஒரே ரீதியில் எல்லாராலும் அங்கீகரிக்கப் பட்டனவாகவும் காணப்படவில்லை. ஒருவன் எதை ஸுகமென்கிறானோ அதையே மற்றொருவன் துக்கமென்கிறான். அதிபோக்யமான சந்தந புஷ்பங்கள் ஒருவனுக்கு மிகவும் ஹிதமாயிருக்க மற்றொருவனுக்கு அவையே துக்ககரங்களா யிருக்கின்றன. ஒரே மனிதனுக்கே ஒரே வஸ்து ஒரு ஸமயம் ஸுகமாகத் தோற்றுவதையும் அதேவஸ்து அவனுக்கே மற்றொரு ஸமயம் அஹிதமாகத் தோற்றுவதையும் காண்கிறோம். இப்படி ஸுக துக்கங்கள் ஒரு தீர்மாநமான ரீதியில் இல்லாமைக்குக் காரணம் யாதெனப் பராமர்சித்தால், அவனவனுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களுக்கு அநுகுணமாகச் சிலவற்றை ஸுகமென்றும் சிலவற்றைத் துக்கமென்றும் சொல்வதுதான் என்று தெரிகிறது. அதாவது ஜீவன்கள் எல்லோருக்கும் ஆத்ம ஸ்வரூபம் துல்யமா யிருந்தாலும் அவர்கள் ஸம்ஸாரத்தில் எந்த தேகத்துட னிருக்கின்றார்களோ அத்தேஹத்தில் அவர்களுக்கு ஆத்மாபிமாநமுண்டாய் இவ்விபரீத ஆத்மாபிமாநத்தாலே அத்தேஹத்திற்கு அநுகூலமானவைகளே தமக்கு ஸுகஸாதந மெனவும் அதற்கு ப்ரதிகூலமானவைகளைத் துக்க ஸாதந மெனவும் க்ரஹிக்கிறார்கள். ஆகையால்தான், மனிதன் தன் சரீரத்திற்கு அநுகூலமா யிருப்பதைத் தனக்கு அநுகூல மெனப் பாவித்து க்ராமத்தில் வஸிக்க ப்ரியப்படுகிறான். ஸிம்ஹமோ தன் சரீராநுகுணமாக வநத்தில் வாஸத்தை விரும்புகிறது. இப்படியே நாநாவித ஜந்துக்களில் ஒவ்வொன்றுக்கு



ஸுகமெனத் தோன்றுமவைகளும் துக்கமெனத் தோன்றுமவைகளும் மற்றொன்றுக்கு அதற்கு மாறுதலாகத் துக்கமெனவும் ஸுகமெனவும் தோன்றுகின்றது. இதுதான் ஸுகமென்றும் இது தான் துக்கமென்றும் ஒரு நியதமான ஆகாரத்தை அவைகளில் காட்ட முடியவில்லை. தம் தம் ஆத்மாபிமாநத்திற்கிணங்க அதற்கு அநுகுணம் ஸுகமென்றும் அநநுகுணம் துக்கமென்றும் சொல்லவேண்டியது அவசியமாகிறது. ஆகையால் ஜீவர்களின் கர்மாதீநமாக ஒரே வஸ்து ஸுகரூபமாயும் அதுவே துக்க ரூபமாயும் தோன்றக்கூடுமாதலால் இந்த ஸுகம் துக்கம் என்ற அம்சங்களும் வஸ்து ஸ்வரூபத்தை யொட்டி வந்ததல்ல; ஜீவர்களின் கர்மாதீநமான சரீராத்மாபிமாந மூலகம். இது உலகத்திலுள்ள ஸமஸ்த வஸ்துவுக்கும் பொதுவானது. இங்கு ஸுகமெனச் சொல்வதெல்லாம் கர்மாதீநமாகத் தோன்றினமையாலும், கர்மம் கழிந்ததும் அதுவும் நிவர்த்திக்கவேண்டியதாகையாலும், அல்பமாயும் அஸ்திரமாயுமே யிருக்கும். பரப்ரஹ்மமோ வென்றால் ஸ்திரமான ஸுகரூபமா யிருக்குமென்பது உபநிஷத் ப்ரஸித்தம். ஜீவ ஸ்வரூபமும், தேவன் மநுஷ்யன் ம்ருகம் எனப்படும் சரீரங்களை விட விலக்ஷணமாயும் ஜ்ஞாநாகாரமாயும் ஈச்வரனுக்கே சேஷபூதமாயு மிருக்கக் கூடியது, அப்படியே ஈச்வரனைத் தவிர மற்றை வஸ்துக்களும் அவனுக்குச் சேஷ மாகையால் ஜீவாத்மாக்களுக்கு அவ்வஸ்துக்களெல்லாம் தமது ஸ்வாமியைச் சேர்ந்தவைகள் என்ற எண்ணத்தால் அத்யந்தாநுகூல மாகவே தோன்றவேண்டும். அப்படித் தோன்றாமல் ஸ்வல்பாநுகூலமாயும் ப்ரதிகூலமாயும் தோற்றுதல் முன் சொன்ன கர்மாதீந மாகையால், அக்கர்மம் கழியுங் காலத்தில் அவைகளில் இருக்கும் அல்பாநுகூலம் அல்லது ப்ரதிகூல மென்ற புத்தி நிவ்ருத்தமாய் அத்யந்தாநுகூலம் என்ற புத்தி யுண்டாய்விடும். ஆகையால் அந்தந்த ஆத்மாபிமாநாநுகுணமாகவே புருஷார்த்தங்களின் வ்யவஸ்தை சொல்லவேண்டியிருப்பதால், ஸ்வாதந்த்ர்யம் ஸுக மென்பதும் பாரதந்த்ர்யம் துக்க மென்பதும் கர்மமூலகமான சரீராத்மாபிமாந மூலமாய் வந்தனவேயன்றி வேறில்லை.

இப்படி ஜீவர்கள் தங்கள் ஸ்வரூபத்தைப் பரமபுருஷனுக்குச் சேஷபூத மென எண்ணவேண்டியிருக்க, அதை ஸ்வதந்த்ரம் (பகவானுக்குச் சேஷமன்று) என்று எண்ணினால் அப்பொழுது அந்த வந்தேறியான ஸ்வாதந்த்ர்யாபிமாநத்திற்குப் பாரதந்த்ர்யம் பாதக மானபடியால் அதைத் துக்க மென்றும் ஸ்வாதந்த்ரியம் அநுகூலமா யிருப்பதால் அதை ஸுக மென்றும் உலகத்தார் எண்ண நேர்ந்தது. அவ்விதமான ஜீவன் ஸ்வதந்த்ரன் என்ற எண்ணம் கர்மாதீந மாகையால் மோக்ஷ காலத்தில அக்கர்மம் நசித்து அதனடியாகப் பிறந்த ஸ்வாதந்த்ர்யத்தில் ஸுகத்வ புத்தியும் நசித்துவிடும். அப்பொழுது அவர்கள் உண்மையில் தங்களை ஈச்வர சேஷபூதர்களென்றே நினைப்பார்களாகையால் அப்பொழுது அவ்வீச்வர பாரதந்த்ரியம் ஆத்ம ஸ்வரூபா

நுகுணமாகவும் போக்யமாகவு மிருக்கும். ஆனால் '[illegible]' என்று பாரதந்த்ரியம் அக்க மெனவே கருதப்படுவது என்னென்னில் எந்தப் பாரதந்த்ர்யம் தமக்கு அநுகுண மன்றோ அதை விஷயீகரித்துச் சொன்னதே யல்லது அது எல்லாப் பாரதந்த்ர்யத்தையும் விஷயீகரிக்க மாட்டாது. இக்காரணம் பற்றியே பர்த்தாவினிடம் பாரதந்த்ர்யம் பார்யைக்கும், குருவினிடம் பாரதந்த்ர்யம் சிஷ்யனுக்கும் அநுகுணமாயும் ஸ்வரூபமாகவுமே காணப் படுகின்றது.

'ஸேவா ஶ்வவ்ருத்தி [illegible]' என்று ஒருவனை ஸேவித்திருத்தல் அவனுக்கு ஏவல் தொழில் செய்தல் ஏன் நிந்திக்கப்பட்டிருக்கிற தெனில், இங்கு ஸேவிக்கத் தகாதவனை ஸேவித்தால் அந்த ஸேவையை நிந்தித்தார்களே யல்லது ஸர்வ சேஷியான ஸ்ரீமந் நாராயணன் விஷயத்தில் '[illegible]' என்று சாஸ்த்ரத்தில் போதிக்கப்பட்ட பரிபூர்ண ப்ரஹ்மாநுபவத்தின் பரீவாஹமாக வந்த பகவத் கைங்கர்ய ரூபமான ஸேவையை நிந்தித்தபடி யன்று. இவ்விஷயம் ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹத்திலும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் பல விடங்களிலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ தேசிகன் ஸாதித்த தத்வமுக்தா கலாபத்தில் இவ்விஷயத்தைப் பூர்வபக்ஷ ஸித்தாந்த ரூபமாய் இரண்டு சுலோகங்களில் காணலாம். அவை பின்வருமாறு:—

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]



ஸ்ரீ:

# சமயம்.

## முதற்பகுதி-வைணவ சமயப் பொதுநிலை யாராய்ச்சி.

(ஸ்ரீ. திரு. அ. இராமகிருஷ்ண சடகோபதாஸர்)

(முன் தொடர்ச்சி:—பக்கம் 149.)

அற்றேல், உயிர்க்கொலை சூது குடி நிறைந்ததும், பூசாரிப் பாட்டுப் போன்ற பலச்சில பாட்டுகளைக் கொண்டதுமான வேதத்தைப் பின்பற்றிய சமயங்களை வைதிகத்தின்பாற் படுத்தல் அமையுமோ வென்னின்; அமையு மென்பது; என்னை? வேள்வியின் பொருட்டுச் சத்துவமாகச் செய்யப்பட்ட உயிர்க்கொலை முதலிய சிறு தொழில்கள் ஆதிமனிதர்களால் ஆக்கப்பட்டவையே அன்றி, தத்துவ முணர்ந்து, அறிவு மதுகையுள்ள பண்டைய சான்றோர்களால் ஆக்கப்படவில்லை யாகலானும், உயிர்க்கொலை யன்ன விழிதொழிற் குடன்படாத அரியபெரிய நூற்களாகிய உபநிடதம், சூத்திரம் முதலியவை பிரமாணமாக நிற்றலானும், வேதமே உண்மைத் தத்துவங்களை இலைமறைகாய் போன் றுய்த்துணர வைத்தலானும், இன்னோரன்னவை நுடங்கு கேள்வியாளர்க் கன்றி ஏனையோர்க்கு எட்டுணையும் புலப்படாமையானும், அறிவை நாள்டைவிற் பிரகாசப்படுத்துதற்கு வேண்டியே பலப்பல சமயங்கள் உலகத்துப் பலவிடத்தும் அமைந்தவாறே மக்கள் மனக்கிளர்ச்சி யுற்றுத் தூய அறிவினைப் பெறற் பொருட்டே பல நெறிகளைக் கூறும் வேத முதலியவை அமைந்தவாற்றானும், ஒருகால் பேத புத்தியால் மயக்க வாய்ப்பட்டு மக்கள் அழிவார்களென்றே பிறப்பில் பல்பிறவிப் பெருமாயனாகிய அப்பன் வேத வியாதனாய்த் தோன்றி வேத முதலியவற்றைச் சிக்கறுத்து, உபநிடதம் கீதை சூத்திரம் முதலிய உண்மை உயரிய நூல்களை வெளிப்படுத்தினான் ஆகலானும் என்பது.

இக்கூறியவாற்றான், வைதிகசமயம் இன்னது என்பது பெறப்பட்டது. வைதிகசமயந்தான் மிகு பழைய காலத்தே ஒன்றாயிருந்து பிறகு மக்கள் மன வேறுபாட்டால் இருகூறாயிற் றென்ப. அவை தாம் வைணவம் சைவம் என்னும் இருவகைச் சமயங்களென் றோதுப. உலகத்து மற்றெல்லாச் சமயங்களை விட இவ்வி யிரண்டுமே உண்மைகளை மிக்கெடுத் தோதுகின்றன. வைணவம், சுருதி மிருதி புராணேதிகாச கீதா சூத்திர நூல்கள் பிரமாணங்களையும், ஆழ்வார்கள் அருளிச் செயல்களையும், திருக்குறளையும் ஒட்டி நிற்கின்றது. சைவம், சுருதி மிருதி முதலியவற்றை யொட்டி

நிற்பதேனும், வைணவம்போல் அத்துணை வலுவாக நின்றபாடில்லை. மற்று அது வேத சூத்திர காலத்திற்குப் பின்றோன்றிய ஆகமத்தைப் பெரிது மொட்டி; திருமந்திரம் சிவஞான போதம் சிவஞானசித்தி தேவார திருவாசகங்களாதிய பிரமாணங்களில் நிற்கின்றது. இவை யிரண்டும் ஒன்றுக்கொன்று சமத்துவமுடையவேனும், அவ்வச் சமய சார்புடையார் அதன் பாலே மிக்கு உறைத்து நின்று தாங்கொண்ட கடவுளை உயர்த்திப் பெருமை யாகவும், எதிர் பக்கத்தாரையும் அவர் கொண்ட கடவுளையும் தாழ்த்தியும் நூல் பல செய்தனர். என்றாலும் இவை யெல்லாவற்றையும் நுணுகி நோக்குவார்க்கு (இவ்விரண்டினுள்) எது மக்கள் மனோபாவத்திற்குப் பொருந்தியதும், உண்மை கூறவல்லதாயு மிருக்கின்றதோ, அதனையே சிறப்புடைச் சமயமென்றறிதற் பாலதென்க.

இனிச் சமயப் பற்றுடையோர் தம் நூலிடையே மற்றைய மதவாதியரையும் அவர் கருத்துக்களையும் மறுத்துத் தாங் கொண்ட கருத்தொன்றினையே நிலைநாட்டுப. திராவிட மாபாடியத்துட் சைவப் பற்றுடைய சான்றோர் பலர் தமது கருத்தினையே பிடிவாதமாக நாட்டினர். அப்பாடிய வுரைகளையே பெரிதுந் தழுவி நிற்போர் பிறமதத்தினரை அறியாமையால் எள்ளி உரைத்தலும், வைணவருட் சில ரவ்வாறு புரிதலும் ஆதிய வின்னோ ரன்ன கண்டனங்கள் நீண்ட நாளாகவே தொடர்ந் தீண்டு நடை பெறுகின்றது. இதனைத்தண்டபாணியடிகள் தமது புலவர் புராணத்திய பிள்ளைப் பெருமாளையங்கார் சருக்கத்தின் கண்ணும் கூறினார். ஆண்டுக் காண்க. இப்பொருட்டுப் பற்றி யாவர்மீதுங் குற்றங்கூறல் ஆகாது; பிடிவாதமான கொடிய வைராக்கியத்தின்கண் அன்னோர் தம்மையும் மறந்து நிற்கின்றாராகலின். இக்குணத்தைக் கடந்து தூயவிரிவான அறிவுடன் திகழ்ந்து பெருந்தகைமைக்கண் அவர் வைகுவரேல்,

‘பிணக்கற அறுவகைச் சமயமு நெறியுள்ளியுரைத்த
கணக்கறு நலத்தனன்..............’
‘விளம்புமாறு சமயமும் அவையாகியும்........’

என்று திருக்குருகூரடிகள் திருவாய்மொழிந் தருளியவாறு எச்சமயத்தின் கண்ணும் உறைபவனாகிய முழு முதற்பொருள் இன்னதென் றோர்ந்து, அவர் பரிசுத்த வைதிக சமயத்தினின்று மிகத் தெளிவுடைய அறிவுடனே பிரகாசிப்பர் என்க. இது கிடக்க. இவ்விருசமயங்களது உயர்வு தாழ்வுகளை அரிதாசர் தமது இருசமயவிளக்கத்துள் தெற்றெனத் தெருட்டினர். அதுவும் வைணவத்துச் சார்பாய் அமைகின்றமையின் அதனையொரு பிரமாண நூலென்று கோடற்பால தன்றெனக் கூறுவர் சிலர். அங்ஙனமாயின், திராவிட



மாபாடிய முதலியவை சைவ சார்பாகச் சொல்லுகின்றமையின், அவையும் பிரமாண நூற்களாகா வென்னல் இழுக்காது. ஆகவே, சைவாகமம் திருமந்திரம் முதலியவை சைவப் பற்றுடைய சைவச் சான்றோர்களாலும், நாலாயிர பிரபந்தம் முதலியவை வைணவப்பற்றுடைய வைணவப் பெரியோர்களாலும் தாந்தாம் உயர்வாக வெண்ணிய சமயத்து உற்றுச் செய்யப்பட்டன வாகலின் அவை யெல்லாம் அவ்வச் சமயினர்க் கன்றிப் பொதுப்பட நோக்கும் நடுவு நிலைமையாளர்க்குப் பிரமாண மாகமாட்டா. என்னை? வைணவமும் சைவமும் அல்லாத ஒரு பேர் இறைவன் எல்லாவற்றையும் இயக்கிக்கொண்டு போதலாலும், அவ்விறைவன் இன்ன மதத்தைச் சார்ந்தவன் என்று பெறப்படுவது இன்மையாலும், அவ்விறைவனை அறிந்தடைதற்குத் தூய கோட்பாடமைந்த வைதிகச் சிறப்புவழி யொன்று வேண்டற் பாலதாகலின் அவ்வழியினைக் கூறும் சமயத்தைச் சார்ந்து மதப்பற்றின்றி ஒழுகுதலே மக்கட்கின்றியமையாக் கடமையாகலாலும், இவ்வுண்மையை நன்கெடுத் துரைக்கும் இவ்விரு சமயத்தோர்க்கும் அமைந்த பொது நூற்களே போந்த சான்றும் என்பது.

இனி யப்பொது நூற்கள் யாவை யென்னில்: தமிழ் மொழியில் விளங்கும் திருவள்ளுவர் திருக்குறளும், ஆரியமொழியில் விளங்கும் வேதவியாதர் பிரம சூத்திரமும் ஆகிய இவ்விரண்டேயாம். இவ்விரண்டு நூற்களும் இறைவனை ஒரு பெயரிட்டு வழங்காமையானும், இறைவன் உலகம் உயிர் என்னும் முப்பொருளைப் பற்றி யோதுகின்றமையானும், மதப் பற்று தோன்றாமையானும், இவை யிரண்டையும் பொதுவும் பிரதானமுமாக வைத்துக்கொண்டு, மற்று வேத வேதாந்தங்களால் இறைவனை எளிதில் உணரும் உயரிய மதத்தை நாட்டலே சிறப்புடைத் தென்று உணர்க. திருக்குறளில்,

‘அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.’

என்னு முதற் குறளால், உலகம் உயிர் இவை தமக்கப்பாற்பட்ட முழு முதற் பொருளாகிய இறைவன் ஒருவன் உள்ளான் என்றும்,

* ‘தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றலரிது.’

என்னு மேழாங்குறளால், இறைவன் வேறு உயிர் வேறு எனக்கொண்டு சிற்றறிவு உடையதாகிய உயிர், அப்பேரிறைவனை அடையாவரை தன்னுடைய

* இதனை இன்னும் பரக்க அடுத்த பகுதியுட் கூறுவாம்,

கவலை முதலியவற்றினின்றும் ‡ நீங்காதென்று கூறி, இதனுல் உயிர்த் தொகுதிகள் பல வென்றும், மற்று அகப்புற வொழுக்கங்களைக் கூறு முகத்தான் உலகத் தன்மையை ஆராய்ந்து, உலகநிலை யுண்மையென்றும், ஆக முப்பொருளைப் பற்றி, நாயனுர் தமது திருவுள்ளத்திற்கொண்ட பெருந்தகையின ரென்றறிக. இவ்வாறே பிரம சூத்திரமும் இம்முப்பொருளைப் பற்றியே கூறுகின்ற தென்னுமது, போதாயன, தங்க, திரமிட, குகதேவ, நீலகண்ட, இராமாநுசபாடிய வுரைகளால் நன்கறியப்படும் ஆற்றையும் உணர்க.

இனிச் சங்கரர் ஏகான்மவாதப் பொருளை யிட்டுப் பாடிய வுரை நிகழ்த்தினாரலோ வெனின் ; அஃதே ! * சங்கரர் தங்கொள்கைக்கு இணக்கியே வேதாந்த சூத்திரங்களை அலைத்து வலிந்து பொருள் கொண்டாராகலின், அபேதம்படப் பொருள் செய்யும் அவரது எண்ணம் நிரம்பாமை கண்டன்றே ஆசிரியர்—இராமாநுசர் விழுமியதொரு நல்லுரை அச்சூத்திரங்கட்கு மீண்டுங் கண்டாரென்க. பிரம சூத்திர சங்கர வுரையை ஆங்கில மொழியில் பெயர்த்த ‘ தீபா ’ என்னும் ஆங்கிலப் பண்டிதர், சங்கரவுரை அச் சூத்திரங்களோடு பொருந்திச் செல்கின்றிலதென்று அவர் எடுத்துக் காட்டுமாற்றானு முணர்க. ஆகவே பிரம சூத்திரம், முப்பொருளைப் பற்றியே கூறுகின்றதென்பதி யாவர்க்கு மொப்ப முடிந்ததொன்றும். இவ்வருமைச் சூத்திரங்களை வகுத்தருளிய வியாதமாமுனி, ஆன்மாக்களின் பரிபாகத்தின் பொருட்டு, வேதங்களைக் கூறுபடுத்தி நான்காக்கி, அவற்றின் பொருளை விளக்கும் உபநிடதங்களை எல்லாம் ஒழுங்கு செய்து, பின்னர் புராணங்களையும் இயற்றி அம்மட்டில் அமையாது, ஐந்தாம் வேதமாகிய மாபாரதத்தையும் செய்து, அதனுட் கண்ணபிரானுல் அருளப்பட்ட அறமொழிகளைப் ‘பகவற்கீதை’என்னு நாமமிட்டுச் சேர்த்து விளக்கிய பின்னரும், மக்கள் சுருதிகளிற் கூறிய பொருளை நுட்ப மறியாது, தம்முண் மயங்கி மாறுபட் டிடர்ப்படுத ேனாக்கி போலும், அவற்றின் (அவ்வேத வேதாந்தங்களின்) நுண்பொருளை யெல்லாம் ஒரு பிண்டமாகத் திரட்டி, **வேதாந்த சூத்திரம்** என்னும் விழுமிய நூல் ஒன்று செய்தாரென் றுணர்க. ஈண்டு,

‡ “My soul finds no rest until it rests in Thee’ என்ற St. Augustine என்பார் கூறியதை ஈண்டுப் பொருத்தி யுணர்க.

* அஃதே என்பது அப்படியா ? என்று பொருள்படும்.



‘ ஏத்திடு சுருதிக ளிசைக்குமாண் பொருள்,
மாத்திரைப் படாவெஞ மாசில் காட்சியார்,
பாத்துணர் பான்மையாற் பலவகைப் படச்
சூத்திர மானவுஞ் சொற்று வைகினுன்’

என்று கச்சியப்பர் கந்தபுராணத்துட் கூறியவற்றையுங் காண்க. எனவே இவ்வேதாந்த சூத்திரம் நம்மனோர்க் கெல்லாம் உண்மைப் பெரும் பிரமாண நூல் ஆம். இது பற்றியன்றே, சமய வாசிரியன்மாரெல்லாம், தத்தங் கொள்கைகளை நிலைநிறுத்தவேண்டி, இதற்குப் பெரிய பெரிய பாடியங்கள் இயற்றினுர்க ளென்றறியக் கடவதாம். இங்ஙனந் தோன்றிய பாடியங்களுக்கு எல்லாம் ஸ்ரீமத் ராமாநுஜாசார்யர் அருளிய பாடியமே சிறந்ததென்பது நடுவு நிலைமை பிறழாது நுணுகி நோக்குவார்க் கெல்லாம் இனிது புலப்படும். அவ்வாறே திருக்குறளுக்குப் பலர் செய்த வுரைகளுக் கெல்லாம் பரிமேலழகர் இயற்றிய வுரையே சிறந்த தென்பது அறிவுடையோர்க் கெல்லாம் ஒப்பமுடிந்ததேயாம்.

(இன்னும் வரும்.)

---

உண்மையான பாவபந்தம் குண க்ருதமன்றிக்கே ஸ்வரூப ப்ரயுக்தமாக விருக்கும். தாய் தனது ப்ரஜையினிடத்தில் கொள்ளும் வாத்ஸல்யமும் தம்பதிகள் பரஸ்பரம் செய்யும் ப்ரேமமும் பகவான் பக்கல் பக்தருக் குண்டாகும் ப்ராவண்யமும் அப்படிப்பட்டவைகளே. அநஸூயை ஸீதாதேவியைப் பார்த்து,

“ ஸுவஶ்யம் வஶே ராமம் திஷ்ட்யா ஸௌந்தர்யமாஶ்ரிதி ”

[திஷ்ட்யாபாக்ய வசத்தால், அதாவது ராமஸௌந்தர்யத்தால், நீர் அவரழகிலே தோற்று வந்தீர்] என்று சொல்ல, ஸீதாதேவி,

“யத்யப்யேஷ பவேத்பர்த்தா மமார்யே வ்ருத்தவர்ஜித:”

[நான் இவர் பக்கல் ப்ரவணையா யிருக்கிற இருப்புக்கடி இவர் குணத்தாலே என்று நாட்டார் நினைப்பர் ; அவர் குண ஹீநருமாய் விரூபருமானுலும் நான் அவரை விடமாட்டேன்] என்று மறுமொழி கூறினுள். ப்ராப்த விஷயகதமானுலும் குணஹாநி பற்றுகைக்கு உறுப்பாமோ ? என்றால், வேம்பின் புழு வேம்பன்றி யுண்ணுது, கரும்பின் புழு கரும்பன்றி யுண்ணுதன்றே ? ஆகையால் உண்மையான ஸ்நேஹம் ஸ்வரூபத்தையே பற்றி நிற்கும்.

ஸ்ரீ:

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

# ஸ்ரீ கீதா பாஷ்ய விசாரம்.

(ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்)

---

ப்ரக்ருதி விவிக்தமான ஆத்ம ஸ்வரூபமே முமுக்ஷுவினால் எப்பொழுதும் அநுஸந்தேயம் என்று ஶாஸ்த்ரங்களெல்லாம் ப்ரதிபாதிக்கையிலும், அதை அறிந்துள்ள மனிதர்கள் கூட ப்ராசீந வாஸனைக்கு அநுகுணமாக ப்ராக்ருத விஷயாநுபவத்தைக் குறித்தே ப்ரவ்ருத்திப்பதை எல்லாரும் பார்க்கலாம். அப்படிப்பட்ட அவர்ஜநீயமான ராகத்தை நமது ப்ரக்ருதி ஸம்பந்தம் நமக்கு ஜநிப்பிக்கின்றது. அநாதிகாலமாய் ப்ரவ்ருத்தமான இந்த வாஸனையை ஜயிப்பது என்பது ப்ரக்ருதி ஸம்பந்தம் பெற்றிருக்கும் நம்மால் ஸாதாரணமாக ஸாத்யமில்லை என்னும் விஷயத்தை உபபாதநம் செய்துகொண்டு வரும் ப்ரகரணத்தில், ஸ்ரீ பகவான் பின் வரும் ஶ்லோகங்களை அநுக்ரஹித்திருக்கிறான்.

> "𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑌰𑌾𑌣𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌂 𑌮𑌨𑌃 ।
> 𑌮𑌨𑌸𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌤𑌸𑍍𑌤𑍁 𑌸𑌃 ॥
> 𑌏𑌵𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌸𑌂𑌸𑍍𑌤𑌭𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
> 𑌜𑌹𑌿 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌂 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌮𑍍 ॥"

இதற்கு ஸ்ரீ பாஷ்யகாரரின் பாஷ்யமாவது:—'மனிதனுடைய ஜ்ஞாநத்தை விரோதிக்கும் விஷயத்தில் இந்த்ரியங்கள் முதலில் ப்ரதாநங்கள்; அவைகளைக் காட்டிலும் ப்ரதாநம் மநஸ்; மநஸ்ஸைக் காட்டிலும் ப்ரதாநம் புத்தி; புத்தியைக் காட்டிலும் ப்ரதாநமாயிருப்பது அது (காமம்). ஆகையால், இந்த்ரிய ஜயத்தில் ப்ரவ்ருத்திக்கும் யோகி, இந்தக் காமத்தைத் தனக்குப் பலமான ஶத்ருவென்று அறிந்து, புத்தியினாலே மநஸ்ஸை நிலை நிறுத்தி, வேறு எவ்விதத்தாலும் ஜயிக்கக் கூடாத அந்த ஶத்ருவை ஜயிக்கவேண்டும்'. இது தான் பாஷ்யத்தின் ஸங்க்ரஹம். இதன் தாத்பர்யம் என்னவென்றால்:—பஹுகாலமாக அநுவ்ருத்தித்து வரும் ஜந்மாந்தர வாஸனை மிகவும் பலிஷ்டம்; அதை ப்ரஸரிக்கவொட்டாமலே தடுப்பது என்பது ஸாத்யமன்று. ஒருவன் அப்படித் தடுக்க முயன்றால், அவன் முயற்சி நிஷ்பலமாகவே முடியும். ஆகையால், மோக்ஷோபாயத்தில் ப்ரவ்ருத்திக்கும் யோகி, முதலில் தனது இந்த்ரியங்களைப் பூர்வம் தன்னால் அப்யஸ்தங்களான விஷயங்களுக்கு ஸஜாதீயமாயும் ஶாஸ்த்ரத்துக்கு ஒத்ததாயுமுள்ள வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்திப்பித்துக் கொஞ்சம் கொஞ்சமாக ஸ்வாதீநப்படுத்திக்கொள்ள முயலவேண்டுமே தவிர, ஸர்வதா இந்த்ரியங்களின் உபரதியை உத்தேஶித்து அவைகளை நிரோதிக்கக் கூடாது. அவ்யாகுல மநஸ்காராயுள்ளவர்களுக்கு அந்த நிரோதம் ஸாத்யமாகலாம்; வ்யாகுலமான மநஸ்ஸை உடைய நமக்கு அது அஸாத்யமே' என்பதுதான். '𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑌂𑌸𑍍𑌤𑌭𑍍𑌯'—மநஸ்ஸைப் புத்தியினால் நிலை நிறுத்தி; அதாவது, 'விஷயங்களில் ப்ரவ்ருத்தியை முழுதிலும் தடுக்காமல், ஶாஸ்த்ரீயமாயும் ஜந்மாந்தர வாஸனைக்கு ஒத்ததாயுமுள்ள வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்திப்பித்து' என்று சொன்னதாயிற்று. 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌂 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌂 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂—தடுக்கமுடியாத காமமாகிற ஶத்ருவை; அதாவது 'ஜ்ஞாநயோகத்தால் தடுக்கக்கூடாத அந்த ஶத்ருவை' என்று அர்த்தம்.



இது தான் ஸ்ரீபாஷ்யகாரருடைய கருத்து. "𑌨 𑌹𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌜𑌾𑌤𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍" [ஒரு க்ஷண காலம்கூட ஒருவனாலும் நிர்வ்யாபாரனாக இருக்க முடியாது] என்று சொல்லும் பகவான், இந்த்ரியங்களை ஸர்வதா நிரோதிக்கவேண்டும் என்று உபதேசிக்கமாட்டான் என்பதே அவருடைய உறுதி. அப்படி இந்த்ரியங்களை நிரோதிப்பது அஶாஸ்த்ரீயம் என்பது கருத்தன்று; ப்ரக்ருதி ஸம்பந்தம் பெற்று ஜந்மாந்தர வாஸனைகளுக்கு அடிமையாகி வ்யாகுலமான மநஸ்ஸை உடைத்தாயிருக்கும் நமக்கு அது ஸாதிக்கத்தகாத கார்யம் என்பதே அவர் தாத்பர்யம். அதனால்தான் மோக்ஷார்த்திகளான மனிதருக்கெல்லாம் இந்த்ரிய வ்யாபார ரூபமான கர்மயோகத்தையே பகவான் உபதேஶிக்கிறானென்றும், இந்த்ரிய வ்யாபார உபரதியைச் சார்ந்துநிற்கும் ஜ்ஞாநயோகத்தை அவன் உபதேஶிக்கவில்லையென்றும் இவர் அபிப்ராயப்படுகிறார். ஆத்ம ஸாக்ஷாத்காரம் என்பது கர்மயோகத்தாலேயே, ஜ்ஞாநயோக வ்யவதாநமின்றிக்கே, ஸாதிக்கத்தகுந்தது என்பது அவர் கொள்கை. பகவானுடைய அபிப்ராயமும் அதுவே என்பதும், "𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃" [ஜ்ஞாநயோகத்திற்கு அர்ஹராயுள்ள ஜநகர் முதலியவர்களும் கர்மயோகத்தாலேயே,(அதாவது-ஜ்ஞாநயோக வ்யவதாநமின்றிக்கே) ஆத்ம ஸாக்ஷாத்கார ரூபமான ஸித்தியை அடைந்தார்கள்] இத்யாதியான வாக்யங்களால் விளங்கும்.

ஜ்ஞாநயோக வ்யவதாநமின்றிக்கே, கர்மயோகத்தாலேயே ஆத்ம ஸாக்ஷாத்கார ரூபமான யோகமானது ஸாத்யமா இல்லையா என்பது ப்ரக்ருத விசாரமன்று. அது விஷயமாக விவாதம் உண்டு. அந்த விவாதத்தை மற்றொரு ஸமயத்தில் விசாரிப்போம். இப்பொழுது நாம் விசாரிக்க ப்ரவ்ருத்திக்கும் அம்ஶம் வேறு. கீழ்க் குறிக்கப்பட்டிருக்கும் ஶ்லோகங்களுள்

முதல் ஶ்லோகத்தில் 'ஸ:' என்னும் ஶப்தம் எதைப் பராமர்ஶிக்கிறது என்பதுதான் ப்ரக்ருத விசாரம். இதில் பாஷ்யகாரர்களுக்குள் விப்ரதிபத்தி ஏற்பட்டிருக்கின்றது. ஸ்ரீ ராமாநுஜ பாஷ்யத்தில், கீழ் விவரித்திருக்கிறபடி 'ஸ:' என்னும் ஶப்தம் ப்ரக்ருதமான 'காமம்' என்பதைப் பராமர்சிக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ ஶங்கர பாஷ்யத்தில் அந்த 'ஸ:' என்னும் ஶப்தம் 'ஆத்மா' என்பதைப் பராமர்ஶிப்பதாக விவரிக்கப்பட்டிருக்கின்றது. எந்த ஆதாரங்களை ப்ரமாணமாகக் கொண்டு இவர்கள் இருவரும் இம்மாதிரி வெவ்வேறாக வ்யாக்யாநம் செய்திருக்கிறார்கள் என்பதை மாத்ரம் சற்று விசாரிப்போம்.

ஸ்ரீ ராமாநுஜ பாஷ்யத்தின் ப்ரமாணங்களாவன:—முதலாவது, 'தத்' (அது) என்னும் ஶப்தம் ப்ரக்ருதத்தையே பராமர்ஶிக்கவேண்டும். அப்படி ப்ரக்ருதத்தில் அதனால் பராமர்ஶிக்கக் கூடியது ஒன்றும் இல்லாமல் இருக்கும் பக்ஷத்தில், அப்பொழுது ப்ரஸித்தமான அப்ரக்ருதத்தையும் அதனால் பராமர்ஶிக்கப் பட்டதாக நாம் எடுத்துக்கொள்ளலாம். இவ்விடத்தில் ப்ரக்ருத பராமர்ஶம் ஸாத்யமாக இருக்கின்றதென்றும், ஆகையால் அப்ரக்ருதத்தைச் சொல்வதாக வ்யாக்யாநம் செய்வது ந்யாய விருத்தமென்றும் நமது பாஷ்யகாரர் அபிப்ராயப்படுகிறார். ப்ரக்ருதம் என்னவென்றால்:—'ஒரு முமுக்ஷுவுக்கு இந்த்ரியங்களை விஷய ஸ்பர்ஶத்திலிருந்து நிரோதித்து ஆத்ம வஸ்துவினிடத்திலேயே நிவேஶிக்க வேண்டும் என்னும் இச்சை பலமாக இருந்தாலும், என்ன காரணத்தால் அவர்களுக்கு அது ஸாத்யமில்லாமல் போகின்றது?' என்று அர்ஜுநன் ப்ரஶ்நம் செய்ய, ஸ்ரீபகவான்,

"காம ஏஷ க்ரோத⁴ ஏஷ:......................
......................வித்⁴த்⁴யேநமிஹ வைரிணம்"

[ப்ராசீந வாஸநையால் ஜநிக்கும் ஶப்தாதி விஷயமான காமமே இவனை விஷயங்களில் இழுத்து விடுகின்றது] என்று ப்ரதிவசநம் சொல்லி, அந்தக் காமம், இந்த்ரியங்கள் மநஸ் புத்தி ஆகிற இம்மூன்றையும் உபகரணங்களாகக் கொண்டு விஷயவ்யாமோஹத்தை ஜநிப்பித்து அவனை ஆக்ரமிக்கின்றது என்று அதை விளக்கி, அதன் மேல்

"இந்த்³ரியாணி பராண்யாஹுரிந்த்³ரியேப்⁴ய: பரம் மந: ।
மநஸஸ்து பரா பு³த்³தி⁴ர்யோ பு³த்³தே⁴: பரதஸ்து ஸ:"

[ஜ்ஞாநத்தை விரோதிப்பதில் இந்த்ரியங்கள் ப்ரதாநங்கள்; ஆனால் அவைகளைக் காட்டிலும் மநஸ் ப்ரதாநம், அதைக் காட்டிலும் புத்தி ப்ரதாநம்,



புத்தியைக் காட்டிலும் எது ப்ரதாநமென்றால், அது தான் ப்ரதாநம்] என்று முடிக்கிறார். 'இந்த்ரியங்கள் மநஸ் புத்தி இவைகளை உபகரணமாகக் கொண்டு காமம் மனிதனை மோஹிப்பிக்கிறது' என்று கீழ்ச் சொல்லிவிட்டு, மேல், 'இந்த்ரியங்கள் மநஸ் புத்தி இவைகளெல்லாம் ப்ரதாநங்கள்; ஆனால் அவையெல்லாவற்றைக் காட்டிலும் ப்ரதாநம் அது' என்று சொன்னால், அந்த 'அது' என்பது காமத்தைப் பராமர்ஶிக்காமல் வேறு எதைப் பராமர்ஶிக்கக்கூடும்? அடுத்த ஶ்லோகத்திலும், 'இவ்விதம் புத்தியைக் காட்டிலும் ப்ரதாநமென்று அறிந்து, மற்றை உபாயங்களால் அடக்க முடியாத அந்தக் காமரூபமான ஶத்ருவை நாஶம்செய்' என்று சொல்லுகிறார். இதுவும், கீழ் ஶ்லோகத்திலுள்ள 'ஸ:' (அது) என்பது காமத்தையே குறிக்க வேண்டும் என்பதை த்ருடப்படுத்துகின்றது.

இரண்டாவது — அர்ஜுநனுடைய ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநம் சொல்ல ஆரம்பிக்கையில், 'காம ஏஷ:' (அப்படி இழுப்பது காமமே) என்று சொல்லி, பிறகு 'வித்⁴த்⁴யேநமிஹ வைரிணம்' [அதை ஶத்ருவென்று அறி] என்றும், 'ததா² தேநேத³மாவ்ருதம்' [அதனாலேயே இந்த ஜந்து ஜாதம் மோஹிக்கப்படுகின்றது] என்றும், 'ஆவ்ருதம் ஜ்ஞாநமேதேந ஜ்ஞாநிநோ நித்யவைரிணா'[அந்தக் காமத்தாலேயே ஜந்துக்களுடைய ஜ்ஞாநம் மறைக்கப்படுகின்றது] என்றும், 'அஸ்யாதி⁴ஷ்டா²நமுச்யதே' [அதற்கு இந்த்ரியம் முதலானவை இம்மாதிரி மோஹிப்பதற்கு உபகரணங்களாகின்றன] என்றும், 'பாப்மாநம் ப்ரஜஹி ஹ்யேநம்' [அந்தப் பாபியை நீ நாஶம் செய்] என்றும் அடுத்து வரும் ஶ்லோகங்கள் எல்லாவற்றிலும் 'அது' என்னும் ஶப்தத்தை ப்ரயோகித்து அந்த ஶப்தத்தினால் காமத்தையே குறிப்பிட்டிருக்கையில், அதற்கு அடுத்து வரும் ஶ்லோகத்தில் 'யோ பு³த்³தே⁴: பரதஸ்து ஸ:' [புத்தியைக் காட்டிலும் ப்ரதாநமானது அதுவே] என்று சொல்லுமிடத்தில் மாத்ரம் 'அது' என்பதால் காமம் சொல்லப்படவில்லை, ஆத்மா சொல்லப்படுகின்றது என்று சொல்வது உசிதமாகுமா?

தவிரவும் இவ்விதம் 'அது' என்பதால் காமமே குறிக்கப்படுகின்றது என்று எடுத்துக் கொண்டாலொழிய அர்த்த ஸ்வாரஸ்யம் கிடைக்கவில்லை; 'புத்தியைக் காட்டிலும் ப்ரதாநம் ஆத்மா' என்று சொன்னால், 'எந்த ப்ரகாரத்தில் ப்ரதாநம்?' என்னும் ஆகாங்க்ஷைக்குக் கீழ் இந்த்ரிய மநோ புத்திகளுக்குச் சொன்னதுபோல, 'ஜ்ஞாநத்தை விரோதிக்கும் அம்ஶத்தில்' என்று சொல்ல வேண்டிவரும். அந்த அம்ஶத்தில் ஆத்மாவுக்கு ப்ராதாந்யம் சொல்வது யுக்தமன்று. இம்மாதிரியானப் பல காரணங்களை அவலம்பித்து நமது பாஷ்யகாரர் 'அது' என்றால் 'காமம்' என்றே விவரித்திருக்கிறார்.

ஸ்ரீ ஶங்கராசார்யர் செய்திருக்கும் விவரணத்திற்கு முக்யமான ஆதாரமென்னவென்றால், கடவல்லி என்னும் உபநிஷத்தில்,

> "இந்த்ரியேப்ய: பரா ஹ்யர்தா அர்தேப்யஶ்ச பரம் மந: |
> மநஸஸ்து பரா புத்திர் புத்தேராத்மா மஹாந் பர: ||
> மஹத: பரமவ்யக்தம் அவ்யக்தாத் புருஷ: பர: |
> புருஷாந்ந பரம் கிஞ்சித் ஸா காஷ்டா ஸா பரா கதி: ||"

[இந்த்ரியங்களைக் காட்டிலும் விஷயங்கள் வஶீகரிக்க வேண்டுவதில் பரங்கள்; விஷயங்களைக் காட்டிலும் மநஸ் பரம்; மநஸ்ஸைக் காட்டிலும் ஆத்மா பரம்; ஆத்மாவைக் காட்டிலும் ஶரீரம் என்பது பரம்; ஶரீரத்தைக் காட்டிலும் ஸர்வாந்தராத்மாவாயுள்ள அந்தர்யாமி பரம்; அவனைக் காட்டிலும் பரம் ஒன்றும் இல்லை] என்று வாக்யங்கள் காணப்படுகின்றன. ப்ரக்ருத கீதா ஶ்லோகங்களின் ரசனையையும் ப்ரயோகிக்கப்பட்டுள்ள ஶப்தங்களையும் பார்க்கும் பொழுது, அந்தக் கடவல்லி வாக்யங்களை மநஸ்ஸில் வைத்துக்கொண்டு ஸ்ரீ பகவான் இந்த ஶ்லோகங்களைச் சொல்லுகிறானென்றே தோன்றுகின்றது. அவ்விடத்தில் 'புத்தியைக் காட்டிலும் பரம் ஆத்மா' என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், இவ்விடத்திலும் புத்தியைக் காட்டிலும் அந்த ஆத்மாவே பரம் என்று சொல்லப்பட வேண்டும். ஆகையால், 'ஸ:' (அது) என்னும் ஶப்தம் ஆத்மாவையே பராமர்ஶிக்க வேண்டும். இதுதான் ஸ்ரீ ஶங்கராசார்யருடைய முக்யமான ஆதாரம். தவிரவும், இந்த ஶ்லோகங்கள், 'இந்த்ரியங்கள் ப்ரதாநங்கள்' என்று மாத்ரம் ஆரம்பிக்கப்படவில்லை; 'இந்த்ரியங்களை ப்ரதாநங்களென்று சொல்லுகிறார்கள்' என்று ஆரம்பிக்கப்படுகின்றது. ஆகையால், இந்தக் கீதைக்கு முன் பூர்வ க்ரந்தங்களில் இந்த விஷயம் சொல்லப்பட்டதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட க்ரந்தம் இந்த உபநிஷத்தாகவே இருக்க வேண்டுமாதலால், இந்த உபநிஷத்துக்கும் ப்ரக்ருத கீதா ஶ்லோகங்களுக்கும் அர்த்த விரோதம் கூடாதன்றோ?

ஆனால், இந்த ப்ரத்யபிஜ்ஞையை நாம் பெரியதொரு காரணமாக ஒத்துக் கொள்ளலாமா? அர்த்த ஸ்வாரஸ்யமும் ப்ரகரண ஔசித்யமுமன்றோ இம்மாதிரி விஷயங்களில் நிர்ணயகங்களாக வேண்டும்? 'ஆத்மா' என்று அர்த்தம் செய்வது ப்ரகரணத்திற்கு அஸங்கதம் என்பது கீழ் நிரூபிக்கப்பட்டிருப்பதிலிருந்து விளங்கும். அர்த்த ஸ்வாரஸ்யமும் தென்படவில்லை. இந்த்ரியம் மநஸ் புத்தி இவைகள் நியமிக்கப்பட வேண்டியவைகளாக இவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளுடன் கூட காமத்தை நியமிக்கப்பட வேண்டியதாகச் சொல்வது ஸ்வரஸமாகுமே தவிர, ஆத்மாவை



நியமிக்கப்பட வேண்டியதாகச் சொல்வது ஸ்வாரஸ்யத்தைக் கொடுக்காது. அப்படி ஆத்மாவையும் நியந்தவ்யமாக ஸ்ரீ பகவான் அபிப்ராயப்பட்டிருந்தால், 'இந்த்ரியாணி மநோ புத்தி:' என்னும் ஶ்லோகத்தில் ஆத்மாவையும் காமத்துக்கு உபகரணமாகச் சொல்லி இருக்க வேண்டும். அப்படிச் சொல்லவில்லை. இந்த்ரியம் முதலானவைகளால் ஆத்மா மோஹிக்கப்படுகின்றது என்றன்றோ அவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது? அப்படி இருக்கையில் இந்த்ரியம் முதலியவைகளுடன் ஆத்மாவுக்கு ஸஹ படனம் எப்படி ஸங்கதமாகும்? தவிரவும், இந்த ஶ்லோகங்களால் உபநிஷத் வாக்யங்கள் ப்ரத்யபிஜ்ஞாதங்களாகின்றன என்று சொல்வதற்குப் போதுமான காரணமும் இல்லை. உபநிஷத்தில் காணப்படும் க்ரமத்திற்கும் இவ்விடத்தில் காணப்படும் க்ரமத்திற்கும் பஹுவான வ்யத்யாஸம் இருக்கின்றது. இந்த்ரியம் மநஸ் இவைகளுக்கு நடுவில் 'அர்தா:' (விஷயங்கள்) என்று ஒன்று உபநிஷத்தில் காணப்படுகின்றது; கீதையில் இல்லை. உபநிஷத்தில் காணப்படும் 'ஆத்மாவைக்காட்டிலும் ஶரீரம் பரம், ஶரீரத்தைக்காட்டிலும் அந்தர்யாமி பரன்' இத்யாதியான அம்ஶமும் கீதாவாக்யத்தில் இல்லை. ஆகையால், உபநிஷத்துக்கும் இந்தக் கீதாவாக்யங்களுக்கும் அர்த்தம் ஒன்றாகவே இருக்கவேண்டும் என்னும் நிர்பந்தமில்லை. 'இந்த்ரியாணி பராண்யாஹு:' [இந்த்ரியங்களை ப்ரதாநங்களென்று சொல்லுகிறார்கள்] என்பதிலுள்ள 'ஆஹு:' (சொல்லுகிறார்கள்) என்னும் நிர்த்தேஶமும், கடவல்லி ஸம்பந்தமாகவே இருக்கவேண்டும் என்னும் நிர்பந்தமும் வேண்டாம். மநு, தமது ஸ்ம்ருதியில்

> "இந்த்ரியாணாம் ஹி சரதாம் யத்யேகம் க்ஷரதீந்த்ரியம் |
> தேநாஸ்ய க்ஷரதி ப்ரஜ்ஞா த்ருதே: பாத்ராதிவோதகம் ||"

என்று இந்த்ரியங்களை ஜ்ஞாந விரோதி வர்க்கங்களுள் ப்ரதாநங்களாகச் சொல்லி இருக்கிறார். இதை அநுஸரித்து, 'மநு முதலானவர்கள் சொல்லியிருக்கிறார்கள்' என்று 'ஆஹு:' என்பதற்கு உபபத்தி சொல்லக்கூடும். ஆகையால், "யோ புத்தே: பரதஸ்து ஸ:" என்னுமிடத்தில் காமமே நிர்த்தேஶிக்கப்படுகின்றது என்று சொல்வதே ஶக்யமென்று தோன்றுகின்றது. வேதாந்த விஷயம் ஸம்பந்தப்பட்ட வரையில் இரண்டு பாஷ்யகாரர்களின் அர்த்தங்களிலும் அவரவர்கள் கொள்கைகளுக்கு எவ்வித பாதகமும் ஸம்பவியாது என்பது உண்மையே யாகிலும், வாக்யங்களுக்கு அர்த்தம் செய்யும் முறைமைக்கு விருத்தமாக ப்ரவ்ருத்திப்பது உசிதமன்றாகையால் இந்த விஷயத்தை இவ்வளவு தூரம் ஸ்ரீபாஷ்யகாரர் பராமர்ஶிக்கும்படி ஸம்பவித்தது என்பதை எல்லாரும் உணர வேண்டும்.



186778

ஸ்ரீ:

# கடிதங்கள்.

ஸ்ரீ. வே. ஸ்ரீ. பத்ராதிபருக்கு :—

சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ. உப. ஸ்ரீரங்கம் கோபால ஸ்வாமி ஐயங்கார் என்று கையொப்பமிட்டிருந்த கடிதத்தைப் பார்த்தேன். ஹார்த்தமான ஆர்த்தியுடன், அவர், நமது பாலர்களைப்பற்றி ஜாத நிர்வேதராய், லோகத்தை உஜ்ஜீவிப்பிக்கும் மார்க்கங்களுள் தமக்கு உசிதங்களாகத் தோன்றியவைகளை வெளிப்படுத்தி இருக்கிறார். இக்காலத்தில் ராஜாங்கத்தார் நமது பாலர்களுக்கு மதவிஷயமான உபதேசத்தை நிர்ப்பந்திக்க மாட்டாரென்பதையும், அப்படி ஒரு வித நிர்பந்தத்தைப் ஏற்படுத்த மடாதிபதிகள் போன்ற பெரியோர்களும் அசக்தர்களென்பதையும் அவர் உணரவில்லை போலும். அவர் குறிப்பிடும் உபாயங்கள் அநுஷ்டாநாநர்ஹங்களாக இருந்தபோதிலும், அவருடைய மநோரதம் அத்யந்தம் ஸாது என்பதைப்பற்றிப் பிந்ந அபிப்ராயங்கள் இருக்க மாட்டா. நமது பாலர்களுக்குப் பால்யத்திலேயே நமது மதவிஷயத்தைப் போதிப்பதும், நமது ஆசார்யர்களால் அநுக்ரஹிக்கப் பட்டுள்ள க்ரந்தங்களில் பரிசயத்தை உண்டு பண்ணுவதும், நம் அஸாதாரண ஆசாரங்களிலும் அநுஷ்டாநங்களிலும் விஶ்வாஸத்தையும் திறமையையும் ஸம்பாதித்துக்கொடுப்பதும் அதிமாத்ரம் அபேக்ஷிதங்களே. என்ன செய்தால் இந்த மநோரதம் நிஷ்பந்நமாகும் என்பதைப் பெரியோர்களெல்லாரும் நன்றாகப் பராமர்ஶித்து ஸமீசீநமும் அநுஷ்டாநார்ஹமுமான ஒரு உபாயத்தைத் தேட வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன். நமது ஸித்தாந்த அபிவ்ருத்தியையும் நமது ஸமவாயத்தின் தார்ட்யத்தையும் கோருமவர்களெல்லாரும் இதைப் பெரியதொரு விஷயமாக நினைத்துக் கொஞ்சம் பரிஶ்ரமப்பட்டால் தான் இதன் நிஷ்பத்தி ஸாத்யமாகும். அம்மாதிரிப் பல பெயர்கள் முன் வருவார்களென்றே நம்பி நான் இந்தக் கடிதம் எழுதலானேன்.

ஸ்ரீரங்கம் ரங்கநாதன்.

---

## புஸ்தக விமர்ஶம்.

### (1) சிறிய திருமடல்.

சிறிய திருமடல் என்னும் இத் திவ்ய ப்ரபந்தமானது, ஸ்ரீ திருமங்கை யாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய ஆறு திவ்ய ப்ரபந்தங்களுள் ஒன்று; இப்பொழுது, பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம் வித்வான் அண்ணங்கராசார்ய ஸ்வாமியால், முன்னோருரைகளைத் தழுவித் தெளிய எழுதிய திவ்யார்த்த தீபிகை என்னும் உரையுடன் அச்சிடுவிக்கப் பட்டிருக்கின்றது. இது ஸ்ரீ வைஷ்ணவர்களுக் கெல்லாம் பரமோபகாரமான ஒரு பெரிய கைங்கர்யமே. சேதநர்களுடைய உஜ்ஜீவநத்தை உத்தேஶித்தே, ஆழ்வார்களருளிச் செய்துள்ள திவ்ய ப்ரபந்தங்களை, எல்லாரும் எளிதாகப் பொருள் தெரிந்து கொள்ளும்படி அவற்றிற்கு உரை எழுதி ப்ரசாரம் செய்வதைவிட வேறு பெரிய கைங்கர்யமும் உண்டோ?



இந்த ஸ்வாமி திவ்யப்ரபந்தம் நாலாயிரம் பாசுரங்கட்கும் இம்மாதிரியே வ்யாக்யாநம் செய்து, அவைகளையும் இப்படிப்பட்ட மாஸாந்த ஸஞ்சிகையின் வழியாக வெளியிடப் போகிறாராம். அநந்ய ப்ரயோஜநமாக அவர் வெளியிடும் இந்த ஸஞ்சிகைகளுக்கு ஆஸ்திக ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும் சந்தாதாரராகச் சேர்ந்து இக்கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்வாரென்று நம்புகிறோம்.

இந்த ஸ்வாமி இம்மாதிரி எளிய தமிழில் உரை எழுதி வருவதுடன், திவ்ய ப்ரபந்தங்களில் பல பாகங்களை ஸம்ஸ்க்ருத ஶ்லோகங்களிலும் மொழி பெயர்த்து வருகிறார். இச் சிறிய திருமடலையும் 'ஆர்யா ஜாதி' என்று சொல்லப்படும் சந்தஸ்ஸில் ஶ்லோக ரூபமாக மொழி பெயர்த்திருக்கிறார். இது ஸம்ஸ்க்ருத ரஸிகர்களெல்லாருக்கும் அநுபாவ்யமாக இருக்கின்றது. இதன் விலை அணா 12.

### (2) ஸ்ரீ வைபவ ஸங்க்ரஹம்.

ஸ்ரீ பாஷ்யகாரர் நியமித்தருளின எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளுள் ஒருவரான முடும்பை நம்பியின் திருவம்ஶத்தில் அவதரித்த ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவின் வைபவத்தை, முன்னோர்களால் ஸங்க்ரஹிக்கப்பட்டிருந்ததைத் தழுவி, ஸ்ரீ.உப. ப்ரதிவாதி பயங்கரம் ஜகத்குரு ஸ்ரீமத் அநந்தார்ய ஸ்வாமி, 'ஆசார்ய சர்யாம்ருதம்' என்னும் பெயருள்ள ஒரு ஸம்ஸ்க்ருத காவ்ய ரூபமாகச் செய்தருளியிருக்கிறார் என்பது தீபிகாபிமாநிகளுக்குத் தெரிந்திருக்கும். அந்த வைபவ உண்மையை ஸம்ஸ்க்ருத ஜ்ஞாநம் இல்லாதவர்களுக்கும் அறிவிக்க வேண்டியது அவஶ்யமென்று எண்ணி, மேற்கண்ட ஆசார்ய சர்யாம்ருதத்தின் மொழிபெயர்ப்பாகிய "வைபவ ஸங்க்ரஹம்" என்னும் இவ்வசந நூலை ஸ்ரீமத் அநந்தாசார்ய ஸ்வாமியின் நியமநத்தின் பேரில் ஸ்ரீப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் அருளிச் செய்திருக்கிறார். இதனை விரும்புமவர்கள் 'ப்ரதிவாதி பயங்கர மடம், சின்ன காஞ்சீபுரம்' என்னும் விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

ஸ்ரீ:

## விஜ்ஞாபநம்.

பல தடவை பஹு ப்ரகாரமாக ப்ரார்த்திக்கப்பட்டும் நமது அபிமாநிகளுட் பலர் இன்னும் இவ்வர்ஷத்திய சந்தாவை அனுப்ப க்ருபை செய்யவில்லை. சிலர் சென்ற இரண்டொரு வர்ஷகாலமாக சந்தாவை அனுப்பாமல் இருக்கையிலும், ஸபையின் அதிகாரிகள் அவர்களுக்குத் தீபிகையை நிறுத்தாமலே அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாஸத்திலாவது எல்லாரும் க்ருபைசெய்து சந்தாவை அனுப்பவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன். ஏப்ரல்மீ 30உக்குள்ளாகச் சந்தாவை அனுப்பாமல் இருக்கும் சந்தாதாரர்களுக்கு அம்மாஸத்திய தீபிகை வி. பி. பார்ஸலாக அனுப்பப்படும். நாளது வருஷத்திய சந்தாவுக்கு மாத்ரம் வி. பி. செய்யப்படுமாகையால், சென்ற வர்ஷங்களுக்கும் சந்தாவைச் செலுத்தாமலிருக்கும் சந்தாதாரர்கள், தாம் செலுத்தவேண்டிய தொகையை மணி ஆர்டர் த்வாரா அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கே. டி. ஸௌந்தர ராஜாசார்யன்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

# பத்ராதிபரின் குறிப்புகள்.

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

**மடாதிபதிகளின் மர்யாதை.**

ஸ்வல்ப காலம் முன், ஸ்ரீ அழகிய சிங்கர், ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹனை அவனுடைய விபூதியுடன் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனை மங்களாஶாஸநம் செய்ய வேணுமென்னும் திருவுள்ளத்துடன் ஸ்ரீரங்கத்திற்கு ஸமீபத்தில் எழுந்தருளினாரென்பதும், அப்பொழுது, ஸ்ரீரங்க வாஸிகளான சில தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அதில் அபிமதம் இல்லாதவர்களாய் மாமூலுக்கு விருத்தமென்று அதைத் தடுத்தார்களென்பதும் நமது அபிமாநிகளுக்குத் தெரிந்திருக்கலாம். இந்த விவாதம், பிறகு, ராஜகீயமான ந்யாய ஸ்தலத்திற்குக் கொண்டு போகப் பட்டு, இரண்டு வருஷ காலமாக அவ்விடத்தில் விசாரிக்கப்பட்டும் ஸ்வல்ப திநங்கள் முன்வரையில் எவ்வித நிர்ணயமும் பெறாததாகவே இருந்துகொண்டிருந்தது. இப்பொழுது இரண்டு கக்ஷிக்காரர்களும் ஒரு விதமான ஸமாதானத்தைப் பரஸ்பரம் செய்துகொண்டு ந்யாய ஸ்தலத்தில் உபஸ்தாபிதமாயிருந்த விவாதத்தை நிவ்ருத்தித்துக்கொண்டு விட்டார்களென்று நாம் கேள்விப் படுகிறோம்.

இது நமக்கு மிக்க ஸந்தோஷத்தை ஜநிப்பிக்கின்றது. ஒரு விவாதம் ஶமநமடைந்தது என்பதே அம்மாதிரி ஸந்தோஷத்திற்கு முக்ய காரணம்.

“ 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑍁 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌶𑌿𑌵𑌂 𑌮𑌿𑌥𑍋 𑌧𑌿𑌯𑌾 ”

[ஸகல ஜந்துக்களும் பரஸ்பரம் க்ஷேமத்தையே கோரிக்கொண்டிருக்கும்படி அநுக்ரஹிக்க வேண்டும்] என்றன்றோ ஸ்ரீ ப்ரஹ்லாதன் ஸ்ரீ ந்ருஸிம்ஹனை ப்ரார்த்தித்தான்? தவிரவும், இம்மாதிரியான விவாதங்கள் ஸ்ரீ அழகிய சிங்கருக்குத் திருவுள்ளத்தில் மஹத்தான க்லேஶத்தை ஜநிப்பிக்கக்கூடியவைகளே. அந்தத் திருவுள்ளத்திற்கு அம்மாதிரியான க்லேஶம் ஜநிக்கக் கூடாதாகை



யால், ஏதோ ஒரு காரண விஶேஷத்தால் ஜநித்த அந்த க்லேஶம் ஶாந்தமானது எல்லாருக்குமே ஸந்தோஷத்தை உண்டுபண்ண வேண்டும்.

ஆனால், இந்த ஸமாதாநத்தின் ப்ரகாரங்கள் என்ன வென்பதை நாம் அறியோம். ஒருகால், இதுவரையில் ஸ்ரீ ஸந்நிதிக்கு நடந்துவந்த மர்யாதைகளில் சில அம்ஶங்கள், இந்த ஸமாதாந ப்ரகாரப்படி குறைவுபட்டிருக்கலாம். அப்படிக் குறைவுபட்டிருந்தால், இது ஸ்ரீ ந்ருஸிம்ஹ பக்தர்களெல்லாருக்கும் ஸந்தோஷத்தைக் கொடுக்காது என்பது உண்மையே. ஆனால், இம்மாதிரியான ஸந்தர்ப்பங்களில் எப்படி அநுஷ்டித்தால் ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய விபூதிக்கு அநுகுணமாக இருக்கும் என்பதை நிர்ணயிக்க ஸ்ரீ அழகிய சிங்கரே அதிகாரி. அவருடைய திருவுள்ளத்தில் ‘இம்மாதிரி ஸமாதாநம் செய்துகொள்வதே இந்த ஸந்தர்ப்பத்திற்கு உசிதமானது’ என்று தோன்றிவிட்டால் அதுவே ப்ரமாணமாக வேண்டுமன்றோ? ஆகையால் பக்தர்களுள் ஒருவரும் இனி இது விஷயமாக எவ்விதமான ஆயாஸத்தையும் மநஸ்ஸில் வைத்துக்கொள்ளக்கூடாது.

இது விஷயமாகச் சிலர் சில சோத்யங்களைச் செய்கிறார்கள். ‘மடாதிபதிகள், பகவத் ஸந்நிதிக்குள் சத்ர சாமரம் முதலிய பரிச்சதங்களுடன் ப்ரவேஶிப்பது ந்யாய்யமா? க்யாதி லாப பூஜாதிகளில் அபிமுகர்களாயிருக்கும் ஸாமாந்ய ஜநங்கள் போல, மடாதிபதிகளும் மற்றவர்களிடமிருந்து ஸம்மாநநத்தைப் பலாத்கரித்துப் பெற்றுக்கொள்ள ப்ரயத்நப்படுவது யுக்தமாகுமோ? ப்ரக்ருத விஷயத்தில், ஸ்ரீ அழகியசிங்கர் தமது ஆஶ்ரமத்துக்கு அத்யந்த விருத்தமாக இருக்கும் இந்த விவாதத்தில் எப்படி ப்ரவேஶித்தார்? தமது பரிச்சதங்களுடன் ஸ்ரீ ரங்கநாதன் ஸந்நிதிக்குள் ப்ரவேஶம் தடைபட்டுப் போன காரணத்தினாலேயே ஸ்ரீ ரங்கநாதனுடைய மங்களாஶாஸநத்தை இவ்வளவு காலம் பரிஹரித்து நின்றது பகவத் பக்தரான அவருக்கு ஸ்வரூப விருத்தமன்றோ?’ என்பவைதான். இம்மாதிரியான சோத்யங்கள் அநபிஜ்ஞர்களாற் செய்யப்பட்டால், அவைகளை அநாதரித்து விடுவதே உசிதமாகும். பண்டிதவரர்களாயும் வ்யபதிஷ்டர்களாயும் இருக்கும் ஸ்ரீ வைஷ்ணவாக்ரேஸரர்களிடமிருந்து அவை உத்பந்நங்களாகி இருக்கிறபடியால் அவைகளை நாம் விசாரிக்க ப்ராப்தமாகின்றது. ஸ்ரீ காஞ்சீநகரத்தில் ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் அநந்தாசார்ய ஸ்வாமிபால் ப்ரசுரிக்கப் பட்டுவரும் ‘ மஞ்ஜுபாஷிணி ’ என்னும் ஸம்ஸ்க்ருத பத்ரிகையில், ப்ரக்ருத விஷயம் சர்ச்சை செய்யப்பட்டுக் கீழ் விவரித்திருக்கிற ப்ரகாரம் சோத்யங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. அவ்விடத்தில் “ 𑌵𑌯𑌞𑍍𑌚 𑌉𑌦𑌾𑌸𑍍𑌮𑌹𑍇.............. 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌜𑍍𑌞𑌵𑌤𑍍 𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌤𑍍 𑌭𑌗𑌵𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 𑌛𑌤𑍍𑌰𑌚𑌾𑌮𑌰𑌾𑌦𑌿𑌪𑌰𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑍈𑌃 𑌸𑌾𑌕𑌂 𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑍇𑌵𑍇𑌤𑌿 ” என்னும் நிகமநத்தையும் காணலாம்.

இதன் உண்மை என்ன? மடாதிபதிகளைப்பற்றி நம்முடைய க்ரஹணம் என்னவென்றால், அவர்கள் ஸாமாந்ய ஜனங்கள்போல க்யாதி லாபாதிகளை அபேக்ஷிக்கிறவர்களல்லரென்றும், பகவத் ஸந்நிதிக்குள் ப்ரவேஶிக்கும் காலம் மாத்ரமின்றிக்கே, ஸர்வ காலத்திலும் அவர்கள் தமது ஆகிஞ்சந்யத்தை உணர்ந்தவர்களே என்றும், ஒருவரிடமிருந்தும் தமக்காக ஸம்மாநத்தை அவர்கள் அபேக்ஷிக்கமாட்டாரென்றும், அவர்கள் ஸ்வரூபம் தெளிந்தவர்களே என்றும், ஸ்வரூபத்திற்கு விருத்தமான ஒரு கார்யத்திலும் ஒரு பொழுதும் அவர்கள் ப்ரவேஶிக்கத் துணியார் என்றும் நாம் எண்ணியிருக்கிறோம். அப்படியானால் அவர்கள் ஏன் பரிச்சதங்களை வைத்துக்கொள்ளுகிறார்களென்றும், மற்றவர்களிடமிருந்து புரஸ்காராதிகளை அபேக்ஷிப்பது போலக் காணப்படுகிறார்களென்றும் கேட்கலாம். அதன் வஸ்து ஸ்திதி பின்வருமாறு நிற்கும். அவர்கள் பரதேவதையின் உபாஸகர்கள்; தேவதா ஸாந்நித்யம் பெற்றவர்கள்; எப்பொழுதும் அந்தத் தேவதையின் ஸாந்நித்யத்தை உணர்ந்தவர்கள்; பாஹ்ய வ்ருத்தியில் மாத்ரமின்றிக்கே, அந்தரங்கமாகவும் ஸர்வகாலங்களிலும் அந்தத் தேவதையினிடத்தில் மநோ பாவத்தை உடையவர்கள். ஆகையால், ஸர்வத்தையும் அந்தத் தேவதையின் ஶேஷமென்றே உண்மையாக அநுபவிப்பவர்கள். அப்படிப்பட்டவர்களைச் சுற்றிப் பரிச்சதங்கள் இருந்தால், அவை அந்தத் தேவதையின் பரிச்சதங்களாகுமே தவிர அவர்களுடைய பரிச்சதங்களாகுமோ? அவர்களுக்குச் செய்யப்படுவன போல நமக்குத் தோன்றும் ஸம்மாநநாதிகளெல்லாம், அவர்களுடைய புத்திப்படிக்கு அந்தத் தேவதைக்குச் செய்யப் படுவனவாகவே இருக்கும். நம்முடைய கண்ணுக்குக் கோசரமாக அந்தத் தேவதை அவர்களிடம் இருக்கும் காலத்திலும், இல்லாத பொழுதும், எக்காலத்திலும் அவர்கள் அதை ஆராதித்து வருவதாகவே த்யானித்துக் கொண்டு வருகிறபடியால், அந்த ஆராதநத்திற்கு உபயுக்தங்களாக இருக்கும் பரிச்சதங்களின்றி அவர்கள் ஒரு க்ஷண மாத்ரமாவது இருப்பது எப்படி ஸாத்யமாகும்?

அவர்களுடைய மநோ பாவம் இம்மாதிரி இருக்கையிலும், அவர்கள், இந்த விசித்ர ஸ்ருஷ்டியின் மத்யத்தில் நின்றுகொண்டு, ஆராத்ய தேவதையினுடைய விபூதி ஸம்பத்தமாகச் சில லோகதந்த்ரங்களை நிர்வஹித்து வருவதையும் தர்மமாகப் பகவதாஜ்ஞையை முன்னிட்டு அங்கீகரித்து வருகிறபடியால், சிற்சில ஸமயங்களில் ஸாமாந்ய ஜனங்களின் த்ருஷ்டிக்குத் தர்ம விருத்தம் போலக் காணப்படும் சில கர்த்தவ்யங்களைச் செய்யும்படியும் அவர்களுக்கு ஸம்பவிக்கின்றது. ஒவ்வொரு மடத்திலும், அந்தந்த ஆராத்ய தேவதையின் விபூதியில் அந்தர்பூதர்களாக விவித வாஸநா பரவஶர்களான ஶிஷ்யர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாரும் விபூத்யந்தர் பாவ மாத்ரத்தாலேயே ஸத்வோத்தரர்களாக இருக்கிறார்க



ளென்று சொல்வது ஸாத்யமன்று. ஏதோ ஒரு ஸுக்ருத விஶேஷத்தின் பலமாக அந்தத் தேவதையினிடத்தில் உக்ர பக்தியுள்ளவர்களாக இருக்கக் கூடும். அப்படி பக்தியுடன் கூடியிருப்பதை ஆதரித்து, அவர்களுடைய மநோபாவத்திற்குச் சிற்சில ஸமயங்களில் இணங்கி, அதனால் அவர்களை அநுக்ரஹிப்பதும் அந்த மடாதிபதிகளுடைய தர்மமேயாகும். அந்தக் காலங்களில், அதன் தத்வத்தை அறியாத ஜனங்கள், மடாதிபதி அதர்மத்தில் ப்ரவ்ருத்தித்து விட்டாரென்றும், ஸ்வரூப விருத்தமான கார்யத்தைச் செய்தாரென்றும் நினைத்து விடுகிறார்கள். ப்ரக்ருதத்தில், ஸ்ரீ அழகிய சிங்கருடைய உபஶாந்தியையும் கல்யாண குண பரிபூர்த்தியையும் நாம் அறிவோம். அப்படிப்பட்ட ஸாத்விக ஶிரோமணி இந்த விவாதத்தில் ப்ரவேஶிக்கவும், ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய விபூதிக்கு அநுரூபமான ஸம்மாநநாதிகள் நடக்கவில்லையென்னும் காரணத்தால் இரண்டு வருஷகாலமாக ஸ்ரீரங்கநாதனுடைய மங்களாஶாஸநமின்றிக்கு எழுந்தருளியிருக்கவும் ப்ராப்தமானால், அது கீழ்க் கூறப்பட்டுள்ள தந்த்ர நிர்வாஹத்தின் பரீவாஹமென்றே நினைக்கவேண்டும். இந்த அம்ஶங்களெல்லாம் 'மஞ்ஜுபாஷிணீ' ஸம்பாதகருக்கு விதித விஷயங்களே. இருந்தபோதிலும், அவர் இந்த விஷயத்தைப்பற்றிக் கீழ்ச் சொல்லப்பட்டிருக்கிறபடி தமது பத்ரிகையில் சர்ச்சை செய்வதை உசிதமென்று நினைத்து விட்டபடியால், வஸ்து ஸ்திதியை ‘‘ஸ்தூணாநயெ’’ என்னும் ந்யாயத்தை அவலம்பித்து ஸ்மரிப்பிக்கத் துணிகின்றோம்.

* * *

**வார்ஷிக மஹாஸங்கம்**

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் இவ்வர்ஷத்திய வார்ஷிக மஹாஸங்கத்தை வருகிற சித்திரை மாஸம் 4௳, 5௳ (ஏப்ரல்மீ 16, 17௳) ஆகிய இந்த இரண்டு திநங்களில், திருக்குடந்தைக்கு ஸமீபத்திலுள்ள திருப்புள்ளம்பூதங்குடி என்னும் திவ்ய தேசத்தில் நடத்துவதாக ஸ்ரீபகவத் பாகவத அநுக்ரஹத்தை முன்னிட்டு ஸபையின் அதிகாரிகள் நிஶ்சயித்திருக்கிறார்கள். யதா பூர்வம் பண்டிதர்களுடைய உபந்யாஸங்கள் இரண்டு திநங்களிலும் நடைபெறும். ஸ்ரீ. உப. வித்வான் குறிச்சி ஶேஷாத்ர்யாசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ. உப. வித்வான் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமியும், முதல் திநம் ஒருவரும் இரண்டாவது திநம் மற்றொருவருமாக அக்ராஸநத்தை வஹிக்கும்படி ப்ரார்த்திக்கப்படவேண்டுமென்றும், இந்த ஸங்கத்தை நடத்தி வைக்கும் கைங்கர்யத்தை ப்ரீதியுடன் ஏற்றுக்கொண்டிருக்கும் திருக்குடந்தை வாஸிகளான ஸ்வாமிகளே உபந்யாஸம் செய்யப்போகும் பண்டிதர்களை வரிக்கவேண்டுமென்றும் ஸம்விதாநம் செய்யப்பட்டிருக்கின்றது. பண்டிதர்களுடைய ஸம்மாநநார்த்தம் யதார்ஹம் உதவியைச் செய்தருளுவதாக ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம் பற்றி இருப்பதாகவும் நாம் கேள்விப்படுகிறோம்.

ஶ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய அநுக்ரஹ ரூபமான இந்த ப்ரஸாதம் ஸபைக்கு மிகவும் ஶ்ரேயஸ்கரம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இவ்வர்ஷத்திய மஹாஸங்கம் சென்ற மார்கழி மாஸத்திலேயே நடைபெற்றிருக்கவேண்டும். சில அஸௌகர்யங்களால் அப்பொழுது அது நடைபெறாமற் போனதை ஏற்கெனவே தீபிகாபிமாநிகளுக்குத் தீபிகா த்வாரா விஜ்ஞாபித்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுதும், நமது அபிமாநிகளெல்லாருக்கும் ஸங்கத்தின் அம்ஶங்களெல்லாவற்றையும் ஸமக்ரமாகவும் ப்ரத்யேகமாகவும் விஜ்ஞாபித்துக் கொள்வதற்கு ஸபையின் கார்யதர்ஶிகள் அஶக்தர்களாக இருக்கிறார்கள். நமது அபிமாநிகளெல்லாரும், க்ருபையுடன் அந்த அஶக்தியைப் பொறுத்துக்கொண்டு, இம்மஹா ஸங்கத்திற்கு எழுந்தருளி, ஶ்ரீஶரண்யன் திருவுள்ளம் உகக்கும்படி ஸங்கத்தை நடத்திவைக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

இந்த ஸங்கத்தில் அந்வயிக்கும் வைதிக வித்வான்களுக்கு ஒரு விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகின்றோம். அப்படித் துணிவதை அவர்கள் க்ருபையுடன் க்ஷமித்தருள வேணும்.

ஸ்வல்ப காலமாகச் சில ஸம்ப்ரதாய பேதங்களைப்பற்றி நமது வித்வான்களுக்குள் ஒரு சர்ச்சை நடந்துகொண்டு வருகின்றது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அந்தச் சர்ச்சை சில அம்ஶங்களில் எல்லையைக் கடந்து உத்பதத்தில் ப்ரவ்ருத்தித்து விட்டபடியால், இருகக்ஷியிலும் வித்வான்களுக்குள் பரஸ்பரம் உத்வேகம் ஜநித்து, இவ்வளவு காலம் சென்றும் இன்னமும் அந்த உத்வேகம் ஶாந்தமாகாமலே இருந்து வருகின்றது. அவகாஶம் நேருமிடங்களில், அது வெளியில் ப்ரஸரித்துவிடுமோ என்று பயப்படக் காரணங்களும் தென்படுகின்றன. நமது ஸதஸ்ஸோ ஶாந்தமானது; எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களையும் அவனது திவ்ய சேஷ்டிதங்களையும் “போ₃த₄யந்த: பரஸ்பரம்” என்னும் ந்யாயப்படி ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு எல்லாரும் ஒருவிதமான ஆநந்தத்தை அநுபவிப்பதற்காக ஏற்பட்டிருக்கிறது; ஶ்ரீ வைஷ்ணவ ஸமுதாயத்திற்கு ஒருவித தாத்பர்யத்தையும் ஸௌஹார்த்தத்தையும் உறுதி செய்வதே அதன் முக்ய நோக்கம். ஆகையால், நமது வித்வான்கள் தமக்குள் அந்தர்க்கதமான ஸம்ரம்பத்தை நிரோதம் செய்துகொண்டு, ஸம்ப்ரதாயங்களுக்குள் இருக்கும் வைஷம்யங்களைப் பற்றிக் கொஞ்சமேனும் அந்த ஸதஸ்ஸில் ப்ரஸ்தாவிக்காமல், ஸதஸ்ஸை நிர்விக்நமாகவும் எல்லாருக்கும் த்ருப்தியைக் கொடுக்கும்படியாகவும் நடத்தி வைக்க வேண்டுமென்று ஸவிநயம் ப்ரார்த்திக்கின்றோம்.

“ந தேவா உபயோர் தாத மஹிம்நோ வக்தும் ந க்ஷமா: ।
தாபஸைர்வா கவிந்த்ரைர்வா நாயகஸ்ய ஹரதஸ்ய கதாம் கதா ॥”

——;0;——



ப்ரஶாஸிதாரம் ஜக₃து₃பாதா₃ந பூ₄தமபி ப்ருஷ்டவாநஸி யேந ஶ்ருதேந மதேந விஜ்ஞாதேந அஶ்ருதமமதமவிஜ்ஞாதம் ஶ்ருதம் மதம் விஜ்ஞாதம் ப₄வதி ?” இத்யுக்தம் ப₄வதி। “நிகி₂லஜக₃து₃த₃ய விப₄வ விலயாதி₃ காரண

---

பூ₄த அப்படி நியமிக்கிறவனையே ‘ஆதே₃ஶ:’ என்று இந்த உபநிஷத் சொல்லுகிறது என்பது வ்யக்தமாகின்றது. பிறகு ‘யேநாஶ்ருதம் ஶ்ருதம் ப₄வதி’ இத்யாதியான வாக்யம் வருகிறபடியால், அதன் அர்த்தத்தையும் பராமர்சித்தால், ‘உத தமாதே₃ஶமப்ராக்ஷ்ய: ?’ என்பதற்கு ‘ஜகத்தை நியமிக்கிறவனாகவும் ஜகத் முழுவதற்கும் உபாதாந காரணமாகவுமுள்ள ப்ரஹ்மத்தைப் பற்றி நீ கேட்டாயா ?’ என்றே அர்த்தம் சொல்ல வேண்டும் என்பது ஏற்படும். உபாதாந காரணத்தைத் தெரிந்து கொண்டாலன்றோ உபாதேயம் தெரிந்ததாகும் ? ஆகையால், இந்த வாக்யத்தின் உட்கருத்து என்னவென்றால்—‘ஸகலமான ஜகத்தினுடைய உத்பத்தி ஸ்திதி லயம் இவை முதலியவைகளுக்குக் காரணமாயும், ஸர்வஜ்ஞத்வம் ஸத்ய காமத்வம் ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய கணக்கில்லாத உதார குணங்களுக்கெல்லாம் ஸமுத்ரம்போலவுமுள்ள ப்ரஹ்மமானது உன்னால் கேட்கப்பட்டதா?’ என்பதே.

சங்கர மதஸ்தர்கள் ‘ஆதே₃ஶ’ என்னும் சப்தத்திற்கு வேறு அர்த்தம் செய்கிறார்கள். ‘ஆ’ என்னும் உபஸர்க்கத்துடன் கூடிய ‘தி₃ஶ’ என்னும் தாதுவுக்கு உபதேசம் என்று அர்த்தம் சொல்லி, ‘உபதேசிக்கப்படும் வஸ்துவே உபதேசம் என்று சொல்லப்படுகிறது’ என்று வ்யுத்பத்தி செய்து, ‘ஆதே₃ஶ:’ என்றால் ‘உபதேசிக்கப்படும் வஸ்து’ அதாவது—ப்ரஹ்மம் என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்வதால் அவர்களுக்குக் கிடைப்பது என்னவென்றால், ‘ஆதே₃ஶ’ என்பதால் நிர்விசேஷ ப்ரஹ்மமே சொல்லப்படுகின்றது என்பதுதான். ‘நியமிக்கிறவன்’ என்னும் அர்த்தத்தை அங்கீகரித்தால், ‘நியமிக்கும் குணமுள்ளவன்’ என்று ஸவிசேஷமான ப்ரஹ்மமே குறிக்கப்படுமன்றோ ? இந்த இரண்டு அர்த்தங்களின் ஸ்வாரஸ்ய தாரதம்யத்தைப்பார்த்தால், நமது மதஸ்தர்கள் சொல்லும் அர்த்தத்திலேயே அதிக ஸ்வாரஸ்யம் இருக்கின்றது என்று சொல்லவேண்டும். முதலாவது ‘ஆ’ என்னும் உபஸர்க்கத்துடன் கூடிய ‘தி₃ஶ’ என்னும் தாதுவுக்கு நியமநமே ப்ரஸித்தமான அர்த்தம்; உபதேசம் என்னும் அர்த்தம் அவ்வளவு ப்ரஸித்தமன்று. இரண்டாவது, இவ்விடத்தில் அஸாதாரணமான தர்மத்தைச் சொல்லி ப்ரஹ்மத்தைக் குறிப்பதுதான் ஸங்கதமாகுமே தவிர, மற்ற வஸ்துக்களுக்குப் பொதுவான தர்மத்தைச் சொல்லிக் குறிப்பது ஸங்கதமாகாது. நிருபாதிக ப்ரஶாஸநம் ப்ரஹ்மத்திற்கே அஸாதாரணம்; உபதேச்யத்தன்மையோ லௌகிகாலௌகிக தர்ம ப்ரஹ்ம பாகார்த்த ஸாதாரணம். ஆனால், ‘ஆதி₃ஶ்யதே அநேந இதி ஆதே₃ஶ:’ என்று வ்யுத்பத்தி செய்வதில் ப்ரத்யய ஸம்பந்தமாக வ்யாகரண விரோதம் கொஞ்சம் உண்டு; ‘உபதி₃ஶ்யதே அஸௌ இதி உபதே₃ஶ:’ என்

ஹேதும் ஸர்வஜ்ஞம் ஸத்யகாமம் ஸத்யஸங்கல்பம் ஸர்வாதிஶாயி ஸமிதோதார
ம்ஜ்ஞஸ்தாநம் கிம் ப்ரஹ்ம த்வயா ஶ்ருதம் ? ” இதி ஹாபிப்ராயஃ ।

---

னும் வ்யுத்பத்தியில் ப்ரத்யய ஸ்வாரஸ்யம் அதிகமே. இப்படி ப்ரத்யயத்தின் அஸ்வாரஸ்யம் இருந்தபோதிலும், ப்ரக்ருத்யர்த்தத்தின் ஸ்வாரஸ்யமும் அர்த்தத்தின் ஔசித்யமும் நமது மதஸ்தர்கள் சொல்லும் அர்த்தத்தில் இருக்கிறபடியால், அதிக ஸ்வாரஸ்யம் இருக்கும் நமது அர்த்தமே அங்கீகரிக்கத் தகுந்தது.

‘ப்ரஶாஸிதாரம் ஜகதுபாதாநபூதமபி’ என்பதற்கு ‘நியமிக்கிறவனுகவும் ஜகத்துக்கு உபாதாந காரணமாகவுமுள்ள’ என்பது அர்த்தம். ‘ஆதேஶ’ என்பதால் நியமிக்கிறவன் என்னும் அர்த்தமும், ‘யேநாஶ்ருதம் ஶ்ருதம்பவதி’ இத்யாதியால் உபாதாந காரணமாக இருக்கிறவன் என்னும் அர்த்தமும் கிடைக்கின்றன. ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும்,

“ ப்ரக்ருதயம் ச ஜகதுஷ்ரஷ்டா யதஶ்சைதச்சராசரம் ”

என்னும் வாக்யங்களில் ‘ப்ரக்ருதயம்’ என்பதால் ஆத்ம ஸ்வரூபமும் ‘யதஶ்சைதச்சராசரம்’ என்பதால் உபாதாநமும் ஆக இரண்டுமே சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விடத்திலும், மேல் ‘ஸந்மூலாஃ’ இத்யாதியில், ‘ஸதாயதநாஃ’ என்பதால் ஆத்மத்வமும், ‘ஸந்மூலாஃ ஸத்ப்ரதிஷ்டாஃ’ என்பதால் உபாதாநத்வமும் ப்ரதிபாதிக்கப் படுகின்றன.

அத்விதீய பதேநாதிஷ்டாத்ரந்தர நிவாரணாத்—‘அத்விதீய’ என்னும் பதம், ‘மற்றுமொரு அதிஷ்டாதா இல்லை’ என்பதைச் சொல்லுகின்றது. ‘அதிஷ்டாதா’ என்பதற்கு ‘ப்ரேரகன்’ (அதாவது—ஏவுகிறவன்) என்று பொருள்; ஆகையால் ‘நியமிக்கிறவன்’ என்று பலிதம்.

யேந ஶ்ருதேந அஶ்ருதம் ஶ்ருதம் பவதி—உபநிஷத்தில் ‘யேநாஶ்ருதம் ஶ்ருதம்பவதி’ என்று மாத்ரம் இருக்கின்றது. இதன் பொருள்—‘எதனால் கேட்கப்படாததெல்லாம் கேட்கப்பட்டதாகுமோ’ என்பது தான். அதாவது—‘எது கேட்கப்பட்டால், கேட்கப்படாததெல்லாம் கேட்கப்பட்டதாகுமோ’ என்று சொன்னதாயிற்று. இதை விளக்கும்பொருட்டே, ‘யேந ஶ்ருதேந’ என்று வ்யாக்யாநத்தில் ‘ஶ்ருதேந’ என்னும் பதத்தைச் சேர்த்திருக்கிறார். இம்மாதிரியே, ‘யேந மதேந’ என்றும் யேந விஜ்ஞாதேந’ என்றும் எங்கும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது. இப்படி அர்த்தம் செய்யாமல், உபநிஷத்தில் இருக்கிறபடி அர்த்தம் செய்தால், ‘எதனால் கேட்கப்படாததெல்லாம் கேட்கப்பட்டதாகுமோ’, (அதாவது-எதனால் எதனுடைய இருப்பால், எது இரு



தஸ்ய நிமித்தகாரணதயா, காரணஸ்யைவ நாநாஸம்ஸ்தாந விஶேஷ
ஸம்ஸ்திதம் கார்யமித்யர்த்த இதி காரணபூத ஸூக்ஷ்ம சிதசித்வஸ்து
ஶரீரக ப்ரஹ்மவிஜ்ஞாநேந கார்யபூதமபிதம் ஜகத் விஜ்ஞாதம் பவதீதி

---

ப்பதால்) என்று அர்த்தம் கிடைக்கும். அது அஸங்கதம். த்ருஷ்டாந்தத்திலும் ‘மண்ணின் இருப்பினுல், குடம் முதலியவை அறியப்படுகின்றன என்பது இல்லை; மண்ணை அறிந்தால் அதன்விகாரங்களாகிற குடம் முதலியவை அறியப்படுகின்றன’ என்று சொல்வதே ஸங்கதம். இந்த விஷயத்தை விவரிக்கும் வேறு உபநிஷத்துக்களைப் பார்த்தாலும், இந்தஅர்த்தமே ஸங்கதமென்று ஏற்படும். ‘கஸ்மிந்நு விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதி ?’ (எதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகிவிடும் ?) என்று சொல்லப்பட் டிருக்கின்றது.

நிமித்தோபாதாநயோ ஸர்வ ஸ்ருஷ்ட்யாதிகாரணபூதம்—இந்தப் பதம், ‘யேநாஶ்ருதம் ஶ்ருதம் இத்யாதியில் ஜகத் காரணத்வம் கண்டோக்தமாக இராவிடினும், அது பலிதமாகின்றது’ என்பதை விளக்கும் பொருட்டு. மேலே சொல்லப்படும் ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களும் இந்தக் காரணத்வத்திற்கு உபயோகிகளாகவே சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆகையால், உத தமாதேஶமப்ராக்ஷ்யஃ, யேநாஶ்ருதம் ஶ்ருதம் பவதி, அமதம் மதம், அவிஜ்ஞாதம் விஜ்ஞாதம் என்னும் வாக்யத்திற்கு, ‘ஜகத்துக் கெல்லாம் உபாதாந காரணமாகவும், அப்படிப்பட்ட காரணத்வத்திற்கு உபயோகிகளான ஸகல கல்யாண குண விஶிஷ்டமாகவுமுள்ள ப்ரஹ்மத்தைப்பற்றி ப்ரஶ்நம் செய்தாயோ?’ என்பது ஹ்ருதயத்துள்ளில் இருக்கும்தாத்பர்யம். ‘அப்ராக்ஷ்யஃ’ (ப்ரஶ்நம் செய்தாயோ) என்பதின் குறிப்பு என்னவென்றால், ப்ரஶ்நம் செய்த பிறகு ஶ்ரவணம் ஏற்பட வேண்டும் என்பதே.

தஸ்ய........வக்ஷ்யந் பிதா-‘ப்ரஹ்மம் ஜகத் எல்லாவற்றிற்கும் காரணம்’ என்பதை ஒத்துக்கொண்டாலும், ப்ரஹ்மத்தை அறிவதனுல், ஜகத் அறிந்ததாகி விடுமோ? காரணமும் கார்யமும் வெவ்வேறு த்ரவ்யங்களல்லவோ ? ஒரே த்ரவ்யமாக இருந்தால் ப்ரஹ்மத்திற்கு விகாரமாகிற ஹேய ஸம்பந்தம் ப்ரஸங்கியாதோ ? இத்யாதியான ஶங்கைகளை உத்தேசித்து, ‘தஸ்ய...........பிதா’ என்பதனுல் அவைகளுக்கு ஸமாதாநம் சொல்லுகிறார்.

இதன் பொருள்:—[காரணமாகிற ப்ரஹ்மமும் கார்யமாகிற ஜகத்தும் வெவ்வேறு த்ரவ்யமல்ல, ஒரே த்ரவ்யம்; ஸம்ஸ்தாநம் (அமைப்பு) வெவ்வேறே தவிர, த்ரவ்யம் வேறன்று. ஒருவிதமான அமைப்புடன் கூடியது காரணம், மற்றொரு விதமான அமைப்புடன் கூடியது கார்யம். ஸூக்ஷ்மாவஸ்தையிலுள்ள சித் அசித் இவைகளை ஶரீரமாக உடைய ப்ரஹ்மம் காரணம், ஸ்தூலாவஸ்தையிலுள்ள சித் அசித் இவைகளை ஶரீரமாக

ஹ்ருதி³ நிதா⁴ய, "யேநாஶ்ருதம் ஶ்ருதம் ப⁴வத்யமதம் மதமவிஜ்ஞாதம் விஜ்ஞாதம்" இதி வாக்யம் ப்ரதி பப்ரச்ச² பிதா ।

ததே³தத் ஸகலஸ்ய வஸ்துஜாதஸ்யைககாரணத்வம் விது³ஷோ ஹ்ருதி³ நிஹிதஜ்ஞாநஸ்ய வாக்யம், பரஸ்பர விலக்ஷணேஷு வஸ்துஷு கஸ்யசித்³ விஜ்ஞாநேந தத³ந்யவிஜ்ஞாநஸ்யாஸம்பா⁴வநீயதாம் பு³த்³த்⁴வா பரிசோத³யதி "கத²ம் நு ப⁴க³வ: ஸ ஆதே³ஶ:?" இதி

---

உடைய ப்ரஹ்மம் கார்யம். ஆகையால் ஸகலத்துக்கும் காரணமாயுள்ள ப்ரஹ்மத்தை அறிந்தால், கார்யமாயுள்ள ஜகத் முழுவதும் அறியப்பட்டதாகி விடும் என்று சொல்வது உபபந்நமே. இந்தப் பாவத்தை மநஸ்ஸில் கொண்டு 'யேநாஶ்ருதம் ஶ்ருதம் ப⁴வதி' என்னும் வாக்யத்தை ப்ரயோகித்து பிதா புத்ரனைப் பார்த்து ப்ரஶ்நம் செய்தார்.] 'நிகில காரணதயா கார்யரூபஸ்ய ஸர்வஸ்ய ஜக³தோ விஜ்ஞாதம் ப⁴வதி' என்பது அந்வயம்.

சேதந வஸ்துவும் அசேதந வஸ்துவும் ஈஶ்வரனுக்கு ஶரீரம். இவை, சில காலங்களில் ஸூக்ஷ்மமென்று வ்யவஹரிக்கப்படும் அவஸ்தையிலும், மற்றும் சில காலங்களில் ஸ்தூலமென்று வ்யவஹரிக்கப்படும் அவஸ்தையிலும் இருக்கின்றன. ஸூக்ஷ்மாவஸ்தையை ப்ரளயமென்றும் ஸ்தூலாவஸ்தையை ஸ்ருஷ்டி என்றும் சொல்வார்கள். இந்த அவஸ்தையின் மாறுதல் முழுவதும் ஶரீரத்திற்கே தவிர, ஶரீரி எவ்வித மாறுதலுமற்றே இருக்கின்றது. ஆகையால், 'இந்த மாறுதலை அங்கீகரித்தால் ப்ரஹ்மம் ஹேயாஸ்பதமாகிவிடும்' என்று ஆக்ஷேபிக்க அவகாஶமில்லை. காரணமும் கார்யமும் ஒரே த்ரவ்யமென்பதும் உபபந்நமே.

வாக்யம் ப்ரதி பப்ரச்ச² பிதா—புத்ரனைப் பிதா இவ்வாறு கேட்டார்; அதாவது—பிதா புத்ரனுக்கு உபதேஶித்தார் என்பது குறிப்பு. ப்ரஹ்மத்திற்கும் சேதநாசேதநங்களுக்கு முள்ள ஶரீரி ஶரீர ஸம்பந்தம் காரணகார்யபாவம் இவை முதலிய ரஹஸ்யார்த்தங்கள், வைராக்யத்தால் உபஸந்நனை ஶிஷ்யனுக்கன்றோ உபதேசிக்கப் படவேண்டும்? இவ்விடத்தில் எப்படி தாமே அதை உபதேஶிக்கிறார்? என்று ஒரு ஶங்கை ஜநிக்கக் கூடும். அதற்கு ஸமாதாநம்:—'புத்ரவ்யதிரிக்தனுக்கு மாத்ரம் அம்மாதிரி நியமம்; புத்ரனுக்குப் புத்ரத்தன்மையே ப்ரஹ்மோபதேஶஹேது' என்னும் ஶாஸ்த்ரார்த்தம் இதனால் ஸூசிதமாகின்றது.

தடேதத்...............ஆதே³ஶ இதி—[இவ்விதம் பிதாவின் ஹ்ருதயத்தில் உள்ள கருத்தை அறியாத புத்ரன், பரஸ்பரம் விலக்ஷணங்களாயுள்ள வஸ்துக்களுள் ஒன்றை அறிவதனால் மற்றவையெல்லாம் எப்படி அறியப்பட்டனவாகும் என்று ஶங்கித்து 'கத²ம் நு ப⁴க³வ: ஸ ஆதே³ஶ: ?' என்று பிதாவைப் பார்த்துக் கேட்கிறான்.] 'ஹே



பரிசோதி³த: வாக்யஸ்யைவ ஹ்ருதி³ நிஹிதம் ஜ்ஞாநாநந்தா³மலத்வைகஸ்வரூபம் அபரிச்சி²ந்நமாஹாத்ம்யம் ஸத்யஸங்கல்பத்வாத்³யநவதி⁴காதிஶயாஸங்க்²யேய கல்யாணகு³ணக³ணம் ஜுஷ்டம் அவிகார ஸ்வரூபம் பரம் ப்³ரஹ்மைவ நாமரூப விபா⁴கா³நர்ஹ ஸூக்ஷ்மசித³சித்³வஸ்துஶரீரம்

---

பகவானுடைய பிதாவே! அந்த ஆதேஶம் என்பது எப்படிப்பட்டது?' என்பது அந்த வாக்யத்தின் பொருள். இந்தக் கேள்விக்கு, பிதா த்ருஷ்டாந்தங்களைக்கொண்டு ப்ரதிவசநம் கொடுத்து உபபாதிக்கிறபடியால், 'ஒன்றின் ஜ்ஞாநத்தால் மற்றவைகளின் ஜ்ஞாநம் ஏற்படுகின்றது என்பது எப்படிப் பொருந்தும்?' என்பதே இந்தக் கேள்வியின் தாத்பர்யம் என்று நாம் அறியவேண்டும்.

பரிசோதி³த: வாக்ய:........ஶரீரஷ்வாநதாஹ—[இவ்விதம் கேட்கப்பட்ட பிதா, தான் மநஸ்ஸில் ஏற்கனவே வைத்துக் கொண்டிருந்த கருத்தை நிரூபிப்பதற்காக லோகத்தில் காணப்படும் த்ருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறார். அந்தக் கருத்து என்ன வென்றால்—ஜ்ஞாநம் ஆநந்தம் அமலத்வம் இவைகளையே ஸ்வரூபமாய் உடையதாயும், பரிச்சேதிக்க முடியாத மாஹாத்ம்யத்தை உடையதாயும், ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய எல்லையில்லாத மேன்மையை உடைய கணக்கற்றக் கல்யாண குணகணங்களை உடையதாயும், எவ்வித விகாரமுமற்ற ஸ்வரூபத்தை உடையதாயுமுள்ள பர ப்ரஹ்மமே, முதலில் நாம ரூப விபாகத்திற்கு அநர்ஹமான ஸூக்ஷ்மாவஸ்தையிலுள்ள சேதநா சேதந வஸ்துக்களை ஶரீரமாகக்கொண்டு, பிறகு தனது லீலார்த்தமாகத் தனது ஸங்கல்ப மாத்ரத்தாலே அந்தச் சேதநா சேதந வஸ்துக்களுக்கு அநந்தமாயும் விசித்ரமாயு முள்ள ஜங்கம ஸ்தாவர ரூபமான அமைப்பை ஜநிப்பித்து, அவைகளைத் தனது அம்ஶமாக வைத்துக்கொண்டே நிற்கிறது; ஆகையால் அந்தக் காரணவஸ்துவை அறிந்தால் மற்றை கார்ய வஸ்துவெல்லாம் அறியப்பட்டதாகிவிடும், என்பதுதான்.]

இதில், 'ப்ரஹ்மம் காரணம், ஜகத் கார்யம்' என்பதும், அப்படிக் காரணமாக இருப்பதற்கு உபயோகிகளானக் கணக்கற்றக் குணங்கள் அந்த ப்ரஹ்மத்திற்கு உண்டு என்பதும், அப்படிக் காரணமாக இருப்பதால் அதற்கு எவ்வித தோஷமும் ஸம்பவிக்கவில்லை என்பதும் ஸூசிப்பிக்கப்படுகின்றன.

ப்ரஹ்மம் ஜகத்திற்கு எப்படிக் காரணமென்றால்-தனது ஸங்கல்பத்தினால் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறபடியால் அது நிமித்த காரணம், தன்னுடைய அம்ஶமாகிய ஶரீரத்தைக் கொண்டே அதை ஸ்ருஷ்டிக்கிறபடியால் அது உபாதாந காரணம்; இவ்விதம் இரண்டுவிதமாகவும் காரணமாகின்றது என்பது ஸமாதாநம். சட்டி பானைகளைக் குயவன் செய்கிறபடியால், அவனே அவைகளுக்கு நிமித்த காரணமென்றும், மண்ணினுல் அவை செய்யப்படு

ஸ்வஶரீரைகதேஶேந ஸ்வஸங்கல்பேந நாநாவித ஸ்திர ஜங்கம ஸ்வ-
ரூப ஜகத் ஸ்ருஷ்ட்வா ஸம்ஶோதநாவஹித இதி தஜ்ஞாநேநாஸ்ய நிர்விகாரஸ்ய

---

கிறபடியால் மண்ணை அவைகளுக்கு உபாதாந காரணமென்றும் தார்க்கிகர்கள் சொல்வார்கள். அம்மாதிரியே இவ்விடத்திலும். ஆனால், தன் ஶரீரத்தைக் கொண்டே தானே ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறபடியால், ப்ரஹ்மம், தானே இரண்டு வித காரணமாகவும் இருக்கின்றது என்பது விஶேஷம்.

ஒவ்வொரு பொருளிலும் இரண்டு அம்ஶங்கள் உண்டு; அவையாவன—எந்தக் குணங்களால் அந்தப் பொருள் அறியப்படுகின்றதோ அவை ஒரு அம்ஶம், அந்தக் குணங்களுடன் கூடியிருக்கும் பாகம் மற்றொரு அம்ஶம்; முதல் அம்ஶத்தை விஶேஷணமென்றும் தர்மமென்றும், இரண்டாவதை விஶேஷ்யமென்றும் தர்மி என்றும் சொல்வார்கள். 'ஸத்யமாயும் ஜ்ஞாநமாயும் அநந்தமாயும் இருக்குமது ப்ரஹ்மம்' என்பதில், ஸத்யத்வம் ஜ்ஞாநத்வம் அநந்தத்வம் இவை ப்ரஹ்மத்தின் விஶேஷணாம்ஶம்; இவைகள் எதற்கு தர்மங்களோ அது விஶேஷ்யாம்ஶம்; அதாவது—ஸத்யத்வம் முதலியவை தர்மங்கள், அவைகளை உடையது தர்மி என்று சொன்னதாயிற்று. நமது ஸித்தாந்தத்தில் ஸமஸ்த சேதநாசேதந வஸ்துக்களும் ப்ரஹ்மத்திற்கு ஶரீரமாக இருக்கிறபடியால், அவைகளும், ஸத்யத்வம் முதலிய குணங்கள்போலே, ப்ரஹ்மத்திற்கு விஶேஷணாம்ஶமாகின்றன. இந்த விஶேஷண விஶேஷ்ய அம்ஶங்கள் இரண்டும் ஒன்றை விட்டு மற்றொன்று ஒரு பொழுதும் பிரியாமல் இருக்கும்; விஶேஷணங்களை விலக்கி விஶேஷ்யத்தை மாத்ரம் தனியாக நினைக்க முடியாது. ஆனாலும், வ்யவஹாரத்திற்காக அவைகளுள் ஒன்றை விஶேஷணமென்றும் மற்றொன்றைத் தர்மி என்றும் நாம் தனித்துப் பேசுவது உண்டு. ப்ரக்ருதத்தில், ப்ரஹ்மத்தின் விஶேஷணாம்ஶமாகிய சேதநாசேதந வஸ்துக்கள், முதலில் நாமரூபங்களற்றிருக்கும் ஸூக்ஷ்மாவஸ்தையிலிருந்து பிறகு நாமரூபங்களுடன் கூடிய ஸ்தூலாவஸ்தையை அடைகிறபடியால், இந்த ஸ்தூலாவஸ்தையிலுள்ள ப்ரபஞ்சத்திற்கு ப்ரஹ்மமே உபாதாநகாரணமாகின்றது என்று நாம் ஒத்துக்கொள்ளுகிறோம்; அந்த மாறுதலும், ப்ரஹ்மத்தின் ஸங்கல்பத்தால் ஸம்பவிக்கிறபடியால், அந்த ப்ரஹ்மமே அந்த ப்ரபஞ்சத்திற்கு நிமித்தகாரணமாகவும் ஆகின்றது என்பது நமது கொள்கை. ஆனால், அந்த மாறுதல், விஶேஷணாம்ஶத்தை மாத்ரம் பற்றிக்கொண்டு தர்மியாகிற ப்ரஹ்மத்திற்கு ஸம்பந்தமில்லாமல் இருக்கிறபடியால், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் (அதாவது-தர்ம்யம்ஶம்) அவிகாரி (அதாவது—மாறுதலற்றது) என்று சொல்லப்படுகிறது. இந்த அர்த்தத்தை 'அவிகார ஸ்வரூப', 'ஸம்ஶோதநாவஹிதம்' என்னும் பதங்களில் கண்டு கொள்ளுகிறது. ஆகையால், ப்ரஹ்மத்தை உபாதாந காரணமாக ஒத்துக்கொள்வதனால், எவ்வித தோஷமும் ப்ரஸங்கியாது. அவாப்த ஸமஸ்த காமனாக இருக்கையிலும்



ஜ்ஞாததாம் ஸ்ருஷ்ட்வா ரோகஷ்டம் காரணயோ: ஏகத்வம் உபாதி-
விதம் த்ருஷ்டாந்தேந ।

---

லீலைக்காக இந்த ஜகத்வ்யாபாரத்தைச் செய்கிறபடியால், அந்தப் பகவானை ஜகத்திற்கு நிமித்த காரணமாகவும் ஒத்துக்கொள்வதில் யாதொரு தோஷமுமில்லை. ஸங்கல்ப மாத்ரத்தாலே இந்த ஜகத் வ்யாபாரம் முழுவதும் நடைபெறுகிறபடியால், இதில் எவ்வித ஆயாஸமும் பகவானுக்கு நேரக் காரணமில்லை.

இவ்விடத்தில், சேதநா சேதநவஸ்துக்களைப் பகவானுடைய ஶரீரமாகச் சொல்வதன் அர்த்தமென்ன என்பதைச் சற்று விசாரிப்போம். இந்த அர்த்தத்தை இந்த க்ரந்தத்திலேயே விஶதமாக மேல் பாகங்களில் விசாரிக்கப் போகிறபடியால், இப்பொழுது ஸ்தூலமாக மாத்ரம் அதன் கருத்தைத் தெரிந்துகொண்டால் போதும். ந்யாய ஸூத்ரத்தில் சொல்லி இருக்கிறபடி, சேஷ்டேந்த்ரியார்த்தாஶ்ரயம் ஶரீரமென்று நாம் ஶரீர லக்ஷணத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது. எந்த த்ரவ்யம் மற்றொன்றைப்பற்ற நியமேந தார்யமுமாய் நியமேந நியாம்யமுமாய் நியமேந ஶேஷமுமாய் இருக்கிறதோ, அது அந்த மற்றொன்றுக்கு ஶரீரம் என்று வேதாந்திகள் சொல்லும் லக்ஷணமே பரிக்ராஹ்யம். சேதநாசேதநங்களுடைய ஸத்தையுள்ள காலமெல்லாம், அவைகளின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள், ஈஶ்வரனுடைய ஸ்வரூபத்தையும் ஸங்கல்பத்தையும் சார்ந்து நிற்கிறபடியால், அவைகளை ஈஶ்வரனுடைய ஶரீரமென்று நாம் க்ரஹிக்கின்றோம். இதன் பூர்ண விசாரம் மேல் செய்யப்படும்.

ஜ்ஞாநாநந்தாமலத்வைக ஸ்வரூபஸ்ய—ஜ்ஞாநம் ஆநந்தம் அமலத்தன்மை இவைகளையே ஸ்வரூபமாக உடையதாய். அமலத்வம் என்றால் எவ்வித தோஷமும் அற்றிருக்கும் தன்மை. இவ்விடத்தில் 'ஸ்வரூபம்' என்பது தர்மியின் ஸ்வரூபத்தை நிரூபித்துக் காட்டும் தர்மத்தை (அதாவது—விஶேஷணாம்ஶத்தைச்) சொல்லுகின்றது. ஜ்ஞாநம் முதலியவை ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நிரூபித்துக் காட்டும் தர்மங்களன்றோ?

அபரிச்சேத்யமாஹாத்ம்யஸ்ய—அளவிடக்கூடாத மேன்மையை உடையதாய். இதில் 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்பதின் 'அநந்த' ஶப்தார்த்தம் விவக்ஷிதம்.

ஸத்யஸங்கல்பாதிகுணை:—இத்யாதியால் 'குணங்களாலும் பகவான் அநந்தன்' என்பது குறிக்கப்படுகின்றது.

அவிகாரஸ்வரூபஸ்ய—ஒரு விதமான விகாரமும் இல்லாத ஸ்வரூபத்தை உடைய. இது 'ஸத்ய' என்னும் ஶப்தத்தின் அர்த்தத்தைக் குறிக்கின்றது. இதில்

" யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத் வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம் " இதி ।

---

'ஸர்வ' என்னும் ஶப்தத்தால், விஶேஷ்யாம்ஶமாகிற தர்மி சொல்லப்படுகின்றது. ஸூக்ஷ்மாவஸ்தையிலிருந்து ஸ்தூலாவஸ்தைக்கு மாறுவதெல்லாம் விஶேஷணம்ஶமாகிற சேதநாசேதந வஸ்துக்களைப் பற்றியதே தவிர விஶேஷ்யாம்ஶத்தை ஸ்பர்ஶிக்கவில்லையாதலால், அவிகாரமாக இருப்பது விஶேஷ்யாம்ஶமே.

ஸ்திர த்ரஸ—ஸ்தாவர ஜங்கம ரூபமான. த்ரஸ என்றால் ஜங்கமம் என்று அர்த்தம். சராசரங்கள் என்பதே தாத்பர்யம்.

யதா ஸோம்ய.........பவதீத்யாதி:—'யதா...........ஸத்யம்' என்னும் ஶ்ருதி வாக்யத்திற்கு அர்த்தமென்னவென்றால்—'மண் என்னும் ஒரே வஸ்து பற்பல வ்யவஹாரங்களுக்கு ஆஸ்பதமாக இருக்கும் பொருட்டு, தன்னுடையச் சில பாகத்தால், குடம் மடக்கு இவை முதலிய பலவித அமைப்புக்களாகிற அவஸ்தாரூபங்களான விகாரங்களை அடைகின்றது; பற்பல பெயர்களையும் பெறுகின்றது. அப்படிப் பல விகாரங்களை அடைந்து பல பெயர்களைப் பெற்றபோதிலும், மண் என்னும் ஒரே வஸ்துவின் பல விதங்களான அமைப்புக்களாக மாத்ரம் இருக்கிறபடியினால், அவையெல்லாம் மண் த்ரவ்யமே என்றும் வேறு வஸ்து அன்றென்றும் நாம் அறிகிறோமன்றோ? அந்த மண் பிண்டத்தை அறிந்ததனாலேயே, அதன் பலவித அமைப்புக்களை உடைய குடம் மடக்கு முதலியவையெல்லாம் அறியப்பட்டனவன்றோ? அம்மாதிரியே ப்ரக்ருதத்திலும் என்பது தான் அதன் அர்த்தம்.

இந்த ஶ்ருதி வாக்யத்தில் இரண்டு கண்டங்கள் இருக்கின்றன. அவையாவன—'யதா..... ...ஸ்யாத்' என்பது முதல் கண்டம்; 'வாசா........ஸத்யம்' என்பது இரண்டாவது கண்டம். காரண ஜ்ஞாநத்தால் கார்ய ஜ்ஞாநம் ஸித்திக்கின்றது என்பது முதல் கண்டத்தால் சொல்லப்படுகின்றது; இரண்டாவது கண்டம் அதன் உபபாதகம். ஸ்ரீபாஷ்யகாரருடைய வ்யாக்யாநத்தில் 'ஏகஸ்யைவ.........ந வஸ்த்வந்தரமிதி' என்பதனால் இரண்டாவது கண்டத்தின் அர்த்தமும், 'யதா ம்ருத்பிண்ட.........பவதி' என்பதனால் முதல் கண்டத்தின் அர்த்தமும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. புத்ரனுடைய ஶங்கை 'காரணமும் கார்யமும் வெவ்வேறாகிறபடியால் ஒன்றின் ஜ்ஞாநத்தால் மற்றொன்றின் ஜ்ஞாநம் எப்படி ஸித்திக்கும்?' என்பதே. 'காரணமும் கார்யமும் வெவ்வேறு அல்ல' என்பது ஸமாதாநம்.

நாநாவ்யவஹாராஸ்பதத்வாய—பல வ்யவஹாரங்களுக்கு ஆதாரமாக இருக்கும் பொருட்டு. இது ஶ்ருதியிலுள்ள 'வாசா' என்பதன் அர்த்தம். 'வாக்' என்பதனால் 'வாக்கினால் செய்யப்படும் வ்யவஹாரம்' க்ரஹிக்கப்படுகின்றது. வாக்பூர்வக வ்யவஹாரம் ப்ரயோஜநம் என்று சொன்னதாயிற்று.



க்ருதீ க்ருதஜ்ஞஸ் த்வமஸி ஸ்வபாவத:
ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததி: ॥ 18

---

ஆநுகூல்ய முடையார் வசத்திலே தாழ நிற்கும் என்றுமாம்." "ஈஶ ஸந்திஶாதும் மாம் கிங்கரஸ் ஸமுபஸ்தித: । ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை ஶாஸநம் கரவாவ கிம்", "ஆஜ்ஞாபய மஹாபாஹோ ப்ரூஹி யத்தே விவக்ஷிதம் । ஸ்வயமேவ ஹரி: சக்ரே விப்ரபாதாவநேஜநம் ॥" இத்யாத்யநுஸந்தேயம். ஆஶ்ரித பாரதந்த்ர்யம் இருக்கும் இருப்பு பிறர்க்காக வென்றால், நியாமகர் இல்லாமையாலே ஸ்வதந்த்ர கார்யமா யிருக்கும்.

வதாந்ய:—இப்படி ஆஶ்ரித பாரதந்த்ர்யம் செய்யும் கார்யம் ஏதென்னில், தன்னையும் தன் உடைமையையும் அவர்களுக்குக் கொடுக்கும் ஔதார்யத்தைச் சொல்லுகிறது. "ப்ரியவாதீ நதஶீலஸ்ய வதாந்ய: ஸர்வகாமித:" "ய ஆத்மதா பலதா:", "ஸ ஸர்வாந் தர்ப்பிதோ ஸத்யா ஸம்பத்ய ப்ரதிநந்த்ய" । "உதாரா ஸர்வ ஏவைதே", "ந தே ரூபம்."

குணவாந்—தன்னையும் தன் உடைமையையும் அவர்களுக்குக் கொடுக்குமிடத்தில், அவர்கள், தன்னையும் தங்கள் சிறுமையையும் பார்த்துப் பிரகாஶியாமே, அவர்கள் அளவாகத் தன்னை அமைக்கும் ஶீலம். 'ஸஹதே ஸம்ஹத:' குண ப்ரகரண மாகையாலே "குணவாந்" என்கிறது. குண ஸாமாந்யத்தைச் சொல்லுகிறதன்று, குண விஶேஷத்தைச் சொல்லுகிறது. குணாத்ய இதி குணம் என்கிறபடியே அநுஸந்தாதாவுக்கு எப்பொழுதும் ஒக்க விடவொண்ணாமையாலே ஶீலத்தை குண சப்தத்தாலே சொல்லுகிறது. 'ஸாரு' சப்தம் வ்ருக்ஷ ஸாமாந்ய வாசியா யிருக்கிற இது, வ்ருக்ஷ விஶேஷத்தைக் காட்டுகிறாப்போலே. "ஸுஜாயதாம்". "கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந்" என்று தொடங்கி "இக்ஷ்வாகுவம்ஶப்ரபவ:" "பஹவோ குணவந்தா:", "ஸ ஹி தேவை ருதீர்ணஸ்ய" என்கிறபடியே ஶீலகார்யம் அவதார்ய மென்கை.

ருஜு:—இப்படி தன்னை அமைத்துக்கொண்டு பொருந்தும்போது, அவர்கள் நாநாருசிக ளாகையாலே, மேட்டிலே விரகாலே நீர் ஏத்துமாப்போலே, அவர்கள் செவ்வைக்கேடே செவ்வையாம்படி செவ்வியனாகை. ஆர்ஜவமாவது ஆஶ்ரித விஷயத்தில் மநோ வாக் காயங்களால் ஏகரூபனாகை. "யஜ்ஜாதீயோ யாத்ருஶோ யத்ஸ்வபாவ ஸ்ஸஜாதீய ஸ்தாத்ருஶ ஸ்தத்ஸ்வபாவ:" "தஸ்மை தயாஸ்த ககுத்ஸ்தாய ஸஹஸோ ஸ்வபாவோ யாவாந் த்வயாபி மஹிமா ஹரதே ஸவஜ்ஞம்।

தாவாம் ஸ்த்ரியாவிஶ்ராணா ஸ்நேஹயீதவ்ரதி: ஸம்ஶ்லிஷ்யவிசுத்தேந ஸாந்த யஶா ” ॥

ஶுசி:—இப்படி உபசரிக்கு மிடத்தில் ஒரு ப்ரயோஜநத்தைக் கணிசியாதே, வெறும் புறத்தில் உபசரிக்கும் பாவ சுத்தியைச் சொல்லுகிறது. “ யோऽயம் ஶுசி ஸ்ஸ ஹி ஶுசி: ” நித்ய ஸம்ஸாரியை ஸ்வஸம்பந்தமே ஹேதுவாக நித்ய ஸூரிகளோடு ஒரு கோவையாக்கவல்ல பாவநத்வத்தைச் சொல்லுகின்றதென்றுமாம். “ பாவந ஸ்ஸர்வலோகாநாம் த்வமேவ ரகு நந்தந ” தத்ரகாண்ட—“ஹத்வா ரக்ஷஸியா ஶைத்யம் யஸ்மிந் ஸ்நாதோऽபி பதஞ்சதே । ஸ விஶ்வே ஶ்ரோத்ர தீர்த்த: ஸ்ரீமாந் ஸ யதி ஸ்ஸ ச வர்ணித: ॥ தயா பவித்ர ஸ்ஸுதா ஆஸ்ய ஸம்ஸ்ருத: ஸ்வபதோऽபி ய: । தஸ்ய ஸேவ்ய ததோ ப்ராஹ்யம் ஸ ச பவித்ரோ யதாஹ்ருதம். ”

ம்ருது:—ஸம்ஶ்லேஷத்தில் இப்படியிருக்கிறவன் இவர்கள் விஶ்லேஷத்தில் ஆற்றமாட்டான் என்கிறது. ஆத்மகுண ப்ரகரண மாகையாலே, மாநஸ தௌர்ப்பல்யத்தைச் சொல்லுகிறது. “ ந சைவ து:ஶகாநு ஶஶகாநு ” ‘ ந ஜீவேயம் க்ஷணமபி ”, “ அபமாநஹ்யாணவம் ஸ்வஸ்ய ”

தயாளு:—ஆஶ்ரித விஷய துக்கத்தில் அஸஹந யிருக்கை. தயை-பர துக்கா ஸஹத்வம். “ஸ ஶகாக்ஷீ ந ரக்ஷ,த,” “ வ்யஸநேஷு மநுஷ்யாணாம்.” இது ஸர்வ ஸாதாரண மாநல் ஆஶ்ரித விஷயத்தில் க்ருபை அவாங் மநஸ கோசரமிறே. “ ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் ”, “ த்ராஹி ப்ரண ஷேதி காருண்யாத் ”, “ ஸ த நிவர்த்தித ” இத்யாதி.

மதுர:—நிர்த்தயனாலும் விடவொண்ணாத ஸ்வாரஸ்யத்தைச் சொல்லுகிறது. நாநாவித ருசிகளான ஜந்துக்களுக்கு அவ்வவர் நிலைகளிலே இனியனா யிருக்கை. “ ரஸோ வை ஸ: ” “ ஶாந்த மைத்ரோ நந்தயாதி,” “ ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி” இத்யாதய:.

ஸ்திர:—இப்படி ஸர்வ ரஸிகனாய் இருக்கிறவன் பக்கலிலே அவ்பாநுகூல்யம் பண்ணினாருக்குத் தனக்கு அந்தரங்கரானார் விரோதிகளானாலும் அவர்களால் அப்ரகம்ப்யனா யிருக்கை. “ந த்யஜேயம் கதஞ்சந ”, “ அபயம் ஸர்வபூதேப்ய:” “என்னடியார் அது செய்யார்”.

ஸ்திர:—ஆஶ்ரிதருடைய ப்ராதிகூல்யங்களாலும் அவிக்ருதனா யிருக்கும் என்னுமாம்.



“ உபர்யுபர்யப்ஜபுவோऽபி பூருஷாந்

ப்ரகல்ப்ய தே யே ஶதமித்யநுக்ரமாத் ।

ஸம:—ஆஶ்ரயிக்கு மிடத்தில் ஜ்ஞாந வ்ருத்தாதிகளில் குறைந்திருந்தார்களே யாகிலும் ஆஶ்ரயணீத்வே ஸமனாகை. “ ஸமோऽஹம் ஸர்வபூதேஷு ”, “ஈடு மெடுப்புமி லீசன்”, “கொள்கை கொளாமை யிலாதான்.”

க்ருதீ—“க்ருதக்ருத்ய: ஸமாஶ்வஸ்த:” இப்படி ஆஶ்ரயித்தால் அவருடைய கர்த்தவ்யாம்ச மெல்லாம் தனக்கே அநுஷ்டேய மென்றிருக்கும். “க்ருதிகர்மணிக்ருத:” அதவா, ஆஶ்ரிதர் தன்னை லபித்தால், இழந்தவர்கள் பெற்றாராய் இருக்கும தன்றிக்கே தன் பேறாயிருக்கை. “க்ருஷிஸஞ்ச ” “தவ ராஜ்யம் ப்ரகல்பதே.”

க்ருதஜ்ஞ:—இப்படி தான் அவர்களுக்கு உபசாரங்களைப் பண்ணினாலும், அவர்கள் அடியில் பண்ணின அல்பாநுகூல்யத்தைக் குவாலாக நினைத்திருக்கும். அவர்கள் பண்ணும் அபகாரமும் அறியான். “ அவிஜ்ஞாதா ஸஹஸ்ராம்ஶு:”. தான் பண்ணின உபகாரமும் அறியான். “ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாபஸர்பதி” என்றிருக்குமவன் அவர்கள் திறத்தில் தான் செய்யப்பெறாத குறையை நினைத்திருக்கு மென்னுமாம். “ஶிலா ஸா யாசித:”

த்வமஸி—ஆஶ்ரயத்தில் நலங்கள் குணம் பெறுதபடி இருக்கு மென்னுதல், இக்குணங்களும் தன்னைப்பற்றி நிறம் பெறும்படி ஸ்ப்ருஹணீயமாய் இருக்கு மென்னுதல்.

ஸ்வபாவத:—இக்குணங்கள் ஆவித்யக மன்றென்னுதல். ஆவித்யகம்-அவித்யாகல்பிதம். ஔபாதிக மென்ன லாகாதபடி நைஸர்க்கிகம் என்கிறது.

ஸமஸ்தகல்யாணகுணாம்ருதோததி:—எல்லா குணங்களும் கல்யாணமாய், நிரதிஶய போக்யங்களுமாய், அநுபவிக்க இழிந்தார்க்குக் கரைகாணவொண்ணாமைக்கு ஒரு கடலென்னு மத்தனை என்கிறார். “யதிக்ஷயா நிவர்த்தந்தே ந மோவிந்தமநக்ஷயாஸ.”

(19). உபர்யுபரி—இக்குணங்களுக்கு ஸங்க்யை யில்லாதவோபாதி, ஓரோ குணங்களுக்கு அவதியில்லை யென்கிறார்.

கிரஸ் த்வதேகைக குணாவதீப்ஸயா
ஸதா ஸ்திதா நோத்யமதோ(அ)திஶேரதே ॥ 19
த்வதாஶ்ரிதாநாம் ஜகதுத்பவஸ்திதி
ப்ரணாஶ ஸம்ஸார விமோசநாதய: |

---

அப்ஜபுவ: உபர்யுபரி தே யே ஶதமித்யநுக்ரமாத் புருஷாந் ப்ரகல்ப்ய—திருநாபீ கமலத்திலே ஸ்வயம்புவாக பிறந்து, அவனோடே ஓதின சதுர்முகனுக்கு மேலே, அவனை மநுஷ்யர் கோடியிலே நிறுத்தி "தே யே ஶத" க்ரமத்தாலே மநுஷ்ய கந்தர்வாதி ப்ருஹ்மாந்தமாக அநந்தாவதி ஸித்த்யர்த்தமாக ப்ரஹ்மாக்களைக் கற்பித்து.

த்வதேகைக குணாவதீப்ஸயா ஸதா ஸ்திதா கிர:—ஆநந்தகுணம் ஒன்றையும் எல்லை காண்கையிலே இச்சையாலே உத்யோகித்து, ஸர்வ காலமும் ஸ்திதைகளான வைதிக கிர்களானவை. "த்வதேகைக" என்கையாலே ஜ்ஞாநாநந்தாவஹமான யுவத்வாதிகளை நினைக்கிறது. "ஸதா ஸ்திதா வேதகிர:" என்று நித்யத்வாபௌருஷேயத்வங்களைச் சொல்லிற்றாகவுமாம். "வேதாக்ஷர ராசி என்றதே வேத கிர்க்கள் என்கிறது, "வேதஶப்தேப்ய ஏவாதௌ" என்கிறபடியாலே, லௌகிக சப்தங்களும் வைதிக சப்தங்களாகையாலே சொல்லுகிறது. அவை அந்தக் குணங்களைக் கண்டபடி என்னென்னில்,

நோத்யமதோ(அ)திஶேரதே—உத்யோக தசையான இதொழிய, மேல் கால் வாங்கிற்றின வில்லை. "ஸைஷா(ஆ)நந்தஸ்ய மீமாம்ஸா பவதி" உதாரப்ய "ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:" இதி. "யுவா ஸ்யாத்". ஸ்வரூபகுணங்களுக்கும் உபலக்ஷணமாதல், யுவத்வத்தால் வந்த தேஜஸ்ஸைச் சொல்லுதல். "அத்யாயக இதி ஜ்ஞாநம், ஆஶிஷ்ட இதி ஶக்தி:, த்ருடிஷ்ட இதி வீர்யம், பலிஷ்ட இதி பலம், தஸ்யேயமிதி ஐஶ்வர்யம், தேஜ யஷ்டூர்த்தா, "தவ யஶ்வஸ்ய ரூபைவ மஹார்ணவவே:" இத்யாதய:.

(20) த்வதாஶ்ரிதாநாமிதி—கீழ்ச் சொன்ன குணங்களுக்குப் போக்தாவான ஆஶ்ரிதர் பெருமையை அருளிச் செய்கிறார். "அஸ்ப்ருஷ்டஸ்ய ச தேஜோம்ஶாஸ்தி" என்று இவனாலே வந்த பெருமையை உடையவர்கள் அளவு இதுவானால், அவன் பெருமை பரிச்சேதிக்க வொண்ணாதென்னுமிடம் கிம் புநர்ந்யாய ஸித்தமன்றோ? என்கிறாரென்றுமாம்.



பவந்தி லீலா விதயஶ்ச வைதிகா
த்வதீய கம்பீர மநோ(அ)நுஸாரிண: ॥ 20

---

த்வதாஶ்ரிதாநாம்—"ப்ரஹ்மருத்ராதீநாம் ஸநகாதீநாம் ச" தேவரைத் தூர நின்று ஆஶ்ரயிக்கிற ப்ரஹ்மாதிகள் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை உபதேச க்ரமத்தாலே பெற்று, ஸம்ஸார விமோசநத்தையும் பண்ண சக்தரான பின்பு, அநந்ய ப்ரயோஜநராய் ஆஶ்ரயிக்கும் அவர்கள் அவற்றைச் செய்யப் பார்த்தால் லீலையாகாநின்றது. முக்தர் தேவரோடே லீலாரஸம் அநுபவிக்கும் போது ஸங்கல்பத்தாலே ஜ்ஞாநாதியாதிகளை ஸ்ருஷ்டித்திறே அநுபவிப்பது. "ஸங்கல்பாதேவ து தச்ச்ருதே:" "ஸங்கல்பாதேவாஸ்ய பிதர: ஸமுத்திஷ்டந்தி". ஜகத்ஸ்ருஷ்ட்யாதியில் ப்ராப்தியில்லாமை போக்கி, சக்தியில்லாமையாலே தவிருகிறாரல்லர். 'ஆதி' சப்தத்தாலே அநேக ஶரீராந்த: ப்ரவேஶ நியமநங்களை நினைக்கிறது. ஜகத்வ்யாபார வர்ஜம். "போகமாத்ர ஸாம்யலிங்காச்ச." அதவா

ஜகதுத்பவஸ்திதி ப்ரணாஶ ஸம்ஸார விமோசநாதயோ லீலா த்வதாஶ்ரிதாநாம் பவந்தி—முமுக்ஷு விஸ்ருக்ஷயாவிறே ஸ்ருஷ்ட்யாதிகள். நிரதிஶய போக்யதையே ஸ்வரூபமாயிருக்க, ஸம்ஸார விமோசகர் என்கிறது ஆஶ்ரிதார்த்தமாகவிறே. 'ஆதி' ஶப்தத்தாலே தத்ர்த்தமான அநேக அவதாரங்கள், திருக்குரவையிலே அநேக விக்ரஹ பரிக்ரஹாதிகள்.

விதயஶ்ச வைதிகா:—"இதம் குரு இதம் மா கார்ஷீ:" என்று ஸ்வதந்த்ரமான வைதிக விதிகளும்.

த்வதீயகம்பீர மநோ(அ)நுஸாரிண:—அநந்ய ப்ரயோஜநராய் ஆஶ்ரயித்தவர்களுடைய கம்பீரமான மநஸ்ஸைப் பின் செல்லாநின்றன. மநஸ்ஸுக்குக் கம்பீரத்வமாவது:— க்ஷுத்ரமான ஐஶ்வர்யாதிகளில் கால்தாழாதே அநந்ய ப்ரயோஜநமாகை. "ப்ரஹ்மவாதிநோ வதந்தி," "ஸஹோவாச வ்யாஸ: பாராஶர்ய:," "யே தத்ர ப்ராஹ்மணா: ஸம்மர்ஶிந:" உதாஹ்ருத்ய "யதா தே தத்ர வர்த்தேரந் ததா தத்ர வர்த்தேதா:" "நினைதோறும் சொல்லுந்தோறும் நெஞ்சிடிந்திடும்" என்று பகவத் விஷயத்தில் இவ்வளவு அவகாஹியாதவர்க்கு, "நிதித்யாஸிதவ்ய:", "விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத", "ஶ்ருதாநம் த்யாயீத" என்று விதிக்கிறதிறே, த்வதீயமான கம்பீர மநஸ்ஸை அநுஸரியாநின்றன வென்றுமாம். "ஶ்ருதி: ஸ்ம்ருதி: மமைவாஜ்ஞா"

𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌾𑌤𑌿𑌭𑍂𑌮𑌯𑍇
𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑍈𑌕𑌭𑍂𑌮𑌯𑍇
𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑍇
𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌦𑌯𑍈𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑌵𑍇 ॥ 21

---

(21) 𑌨𑌮𑍋 𑌨𑌮 𑌇𑌤𑌿—இதுக்குக் கீழ் ஈஶ்வரனுடைய ஸ்வரூபத்தால் வந்த உத்கர்ஷத்துக்கும், உபயவிபூதி யோகத்தால் வந்த ஐஶ்வர்யத்துக்கும், குணோத்கர்ஷத்தால் வந்த நீர்மைக்கும் தோற்று "𑌜𑌿𑌤𑌂𑌤𑍇" என்னும் ஶ்வேத த்வீப வாஸிகளைப் போலேயும் "𑌨𑌮𑌃 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌦𑌥 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌸𑍍𑌤𑍇" என்ற அர்ஜுநனைப் போலேயும், "யாருமோர் நிலைமையன்" என்ற ஆழ்வாரைப் போலேயும் ஶரண்யனுடைய பெருமையை அநுஸந்திக்கிறார். இதுக்கு முன்பு ப்ராப்ய ஸ்வரூபம் சொல்லிற்றாய், இதில், ப்ராப்தாவின் ஸ்வரூபம் சொல்லுகிற தென்றுமாம். கீழ் ஶரண்ய ஸ்வரூபம் சொல்லிற்றாய், மேல் சொல்லப்படுகிற ஶரணாகதியை இதில் ப்ரஸ்தாவிக்கிறார் என்றுமாம்.

𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌾𑌤𑌿 𑌭𑍂𑌮𑌯𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 :—எத்தனையேனும் ஜ்ஞாநாதிகரும் ஸ்வயத்நத்தால் அறியப்புக்கால், அவர்களுக்கு வாங் மநஸ்ஸுக்களுக்கு அபூமியா யிருக்கிற உனக்கு. "𑌯𑌤𑍋 𑌵𑌾𑌚𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇," "𑌯𑌸𑍍𑌯𑌾𑌯𑌂 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌵𑌾 𑌨 𑌵𑌾 …". "𑌨𑌮𑌃" என்று அஹங்காரமில்லாத ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. "𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌿𑌃" "𑌅𑌹𑌮𑌪𑌿 𑌨 𑌮𑌮" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 "𑌉𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑌤𑌾𑌂 𑌯𑍇 𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 𑌅𑌤𑍋 𑌨𑌮 𑌇𑌤𑌿". "𑌆𑌤𑍍𑌮𑌦𑌾𑌸𑍍𑌯𑌂 𑌹𑌰𑍇𑌃 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌂 𑌚 𑌸𑌦𑌾 𑌸𑍍𑌮𑌰" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿. 𑌨𑌮𑌃𑌶𑌬𑍍𑌦𑌂 பர்யாய மாகையாலே ஶரணாகதியை ப்ரஸ்தாவிக்கிற தாகவுமாம். வீப்ஸையாலே அந்த ஸ்வபாவத்துக்குத் தோற்று அருளிச் செய்கிறார். "𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌨𑌮𑌃" "𑌭𑍂𑌯𑍋 𑌨𑌮𑌃" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 "𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌵𑌃 𑌨𑌮𑌃" '𑌅𑌨𑌨𑍍𑌤𑌕𑍃𑌤𑍍𑌵𑌃 𑌨𑌮𑌃'

𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑍈𑌕 𑌭𑍂𑌮𑌯𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃—நீ காட்டக் காண்பாருடைய வாங் மநஸ்ஸுக்களுக்கு நிலமாயிருக்கிற உனக்கு; "𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑌾𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑍍𑌵𑌤𑍍𑌤 𑌏𑌵 𑌪𑍃𑌥𑌗𑍍𑌵𑌿𑌧𑌾𑌃" இத்யாதி.

𑌅𑌨𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑍇—அபரிச்சேத்யோபய மஹா விபூதிகனாய் இருக்கிற உனக்கு வாங் மநஸ்ஸுக்களுக்கு அபூமியாகைக்கடி அபரிச்சேத்ய மஹா விபூதிகனா யிருக்கை. 𑌅𑌨𑌨𑍍𑌤𑌦𑌯𑍈𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑌵𑍇—உன்னை வாங்மநஸ்



𑌨 𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨 𑌚𑌾𑌤𑍍𑌮𑌵𑍇𑌦𑍀
𑌨 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑍇 ।
𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑍋𑌽𑌨𑌨𑍍𑌯𑌗𑌤𑌿𑌃 𑌶𑌰𑌣𑍍𑌯 !
𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌮𑍂𑌲𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 । 22

---

ஸுக்களுக்கு ஏக பூமியாம்படி பண்ணும் அபரிச்சேத்யதைக்கு ஒரு ஸிந்துவா யிருக்கிற உனக்கு, "𑌯𑌦𑌿 𑌶𑌕𑍍𑌨𑍋𑌷𑌿 …" என்று ஸர்வ ஶக்தியை ஒரிடைச்சி பரிச்சேதிக்கலாம் படியிறே க்ருபையினுடைய நிரவதிகத்வம்.

(22.) 𑌨 𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑍍𑌮𑌿—தம்முடைய அதிகாரத்தைச் சொல்லிக் கொண்டு, ப்ரஸ்துதமான ப்ரபத்தியை ப்ரயோகிக்கிறார். கீழ்ச் சொன்ன உபேயாநுகூலமான உபாயத்தை அநுஷ்டிக்கிற தென்னுமாம். கீழ், '𑌅𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸" "𑌉𑌲𑍍𑌲𑌙𑍍𑌘𑌿𑌤" என்கிற விடத்திலே துஷ்ப்ரக்ருதிகள் உன் பெருமையை அறியார்கள்; ஸத்ப்ரக்ருதிகள் அறிவார்கள் என்றார். "𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃" என்கிற ஶ்லோகத்தில் ஸ்வரூபத்தைப் பாதந்த்ரமாக உணர்ந்தவனுக்கே இவ்விஷயம் ப்ராப்யமாவது; ஸ்வதந்த்ரனுக்கு ப்ராப்ய மன்றென்கிறது. ஆஶ்ரயிக்குமிடத்தில் ஸ்வஶக்தி கொண்டு ஆஶ்ரயிக்கும் விஷயமன்று. தன்னுடைய ஆகிஞ்சந்யத்தை முன்னிட்டுக்கொண்டு ஆஶ்ரயிக்கும் விஷயமென்கிறார்.

𑌨 𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑍍𑌮𑌿—தார்மிகனாக வென்கிறேனல்லேன், நாஸ்திகனென்கிறேனல்லேன், தர்மத்தில் நிஷ்டையுடையேனல்லேன். சிலர் தார்மிகனென்று நினைக்கைக்கும், நானும் எனக்கு நன்மையுண்டென்று ப்ரமிக்கைக்கும், தானே சில ப்ரவ்ருத்தியாநின்றானாகில் தானே செய்திடுக வென்று நீ கைவிடுகைக்கும் வேண்டுவதுண்டித்தனை. உன் திருவடிகளை ப்ராபிக்கைக்கு ஹேதுவாக வேண்டும்படியான ப்ரவ்ருத்தியில் நிஷ்டையில்லை யென்கை.

𑌨 𑌚𑌾𑌤𑍍𑌮𑌵𑍇𑌦𑍀—ஆத்மதர்ஶநம் பண்ணிப் போருமவர்களைப் போலே சொல்லி நிர்ப்பந்திக்கிலேனல்லேன், கர்ம யோகாநுஷ்டாநத்தாலே க்ஷீண பாபனானவனுக்கு ஆத்ம யாதாத்ம்ய தர்ஶநமா யிருக்க, அதில்லை யென்ற போதே, தத்ஸாத்யமான ஜ்ஞாநமில்லாமை அர்த்த ஸித்தமாயிருக்க, ஜ்ஞாநமில்லை என்கிறது, "𑌬𑌹𑍂𑌨𑌾𑌂 𑌜𑌨𑍍𑌮𑌨𑌾𑌮𑌨𑍍𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍" என்று ஜந்மாந்தர ஸம்ஸ்காரத்தாலே ஜ்ஞாநம் பிறக்கலாமிறே என்னில், அதுவுமில்லை என்கிறார்.

ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே
ஸஹஸ்ரஶோ யந்ந மயா வ்யதாயி ।

---

த்வச்சரணாரவிந்தே ந பக்திமாந்—இவ்வாத்மாவுக்கு நாதனாயிருந்துள்ள உன்னுடைய நிரதிஶய போக்யமான திருவடிகளில் அநவரத பக்தியையுடையே னல்லேன். கர்ம ஜ்ஞாநங்களை அங்கமாக உடைத்தான பக்தி. அங்கந்தான் இல்லை யென்றபோதே, இதுவுமில்லையன்றோ வென்னில், பூர்வோக்த ப்ரகாரத்திலே ஜந்மாந்தர ஸம்ஸ்காரம் உதவி உண்டாகலாமிறே வென்னில், அதுவுமில்லை யென்கை, "குளித்து மூன்றனலை" "நோற்ற நோன்பு", "கறவைகள் பின்சென்று" என்றும்.

அகிஞ்சந:—என்று அநுதாபமென்ன, இவை உண்டாகைக்கு உறுப்பான ஆத்மகுண மென்ன, அதிகாரிசக்தி வாஞ்சாதிக ளென்ன, இவற்றை உடையே னல்லேன்.

அநந்யகதி:—இப்படி நம்மைக் கிட்டுகைக்குக் கைம்முத லில்லையாகில், புறம்பே ரக்ஷகராயிருப்பார் பக்கலிலே போனாலோ வென்னில், புறம்பொரு புகலில்லை என்னுதல். "உன்னைவிட் டொன்று மாற்றகிற்கின்றிலேன்" என்கிறபடியே உன்னை யொழியச் செல்லா தென்னுதல்.

ஶரண்ய—தம் பக்கல் முதலில்லாதார்க்கு ஶரணவரணார்ஹனிறே.

த்வத்பாதமூலம்—தேவர் திருவடிகளை மூல மென்றது. ஸௌலப்யாதி குணங்களையும், இதராவயவங்களையுமொழிய திருவடித்தாமரைகளை நினைக்கிறது.

ஶரணம் ப்ரபத்யே—விரோதி நிவ்ருத்தி பூர்வகமான கைங்கர்யஸித்திக்கு உபாயமாக அத்யவஸிக்கிறேன். "உபாயே க்ருஹ ரக்ஷித்ரோ:". அஹிர்ப்புத்ந்ய ஸம்ஹிதையிலே இதனுடைய ஸ்வரூபம் சொல்லுகிறது. "அஹம் அஸ்ம்யபராதாநாமாலய:". ஶ்வேதாஶ்வதரே—"யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்". இந்த ஶ்லோகத்தால் அதிகாரி ஸ்வரூபமும் ஶரணாகதி ப்ரயோகமும் சொல்லிற்றாயிற்று.

(23) ந நிந்திதம்—அநுகூலங்களில்லை யென்று வெறுக்க வேண்டா, [illegible] அழிக்கவற்றான நிஷித்தாநுஷ்டா நங்களில்லை.

186770

ஶ்ரீ:

# விஜ்ஞாபநம்.

இவ்வர்ஷத்திய மஹோத்ஸவத்தை வருகிற சித்திரை௴ 4, 5௳ (ஏப்ரல்௴ 16, 17௳) களில், **ஶ்ரீ புள்ளம் பூதங்குடி** என்னும் திவ்ய தேசத்தில் நடத்துவ தாக நிச்சயிக்கப் பட்டிருக்கின்றது. **ஶ்ரீ. உப.** வித்வான் குறிச்சி ஶேஷாசார்ய ஸ்வாமி முதல் தினத்திலும், **ஶ்ரீ.** உப. வித்வான் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி இரண்டாவது தினத்திலும் அக்ராஸநத்தை வகிப்பார்கள். வழக்கம்போல பண்டிதர்களுடைய உபந்யாஸங்களும் நடைபெறும். அவகாசம் மிதமாக இருக்கிறபடியால் நமது அபிமானிகளுக்கு ப்ரத்யேகம் ஆஹ்வான பத்திரிகை அனுப்பக்கூடாமல் இருக்கின்றது. தீபிகா த்வாரா செய்யப்படும் இந்த விஜ்ஞாபநத்தையே ஆஹ்வாந பத்ரிகையாகத் திருவுள்ளம்பற்றி, நமது அபிமாநிகளெல்லாரும் ஸதஸ்ஸுக்கு எழுந்தருளி ஸதஸ்ஸை நடத்திவைக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன். ஶ்ரீ புள்ளம் பூதங்குடி என்னும் திவ்யதேசம் திருக்குடந்தைக்கு ஸமீபத்திலுள்ள ஸுந்தரப் பெருமாள் கோயில் ஸ்டேஷனிலிருந்து ஸ்வல்ப தூரத்தில் இருக்கின்றது. ஸதஸ்ஸை நடத்திவைப்பதாக ஒத்துக் கொண்டிருக்கும் திருக்குடந்தை ஸ்தல வாஸிகள், ஸதஸ்ஸுக்கு எழுந்தருளபவருக்கு வேண்டிய ஸௌகர்யத்தைச் செய்வார்கள்.

**எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார்,**

காரியதர்சி.

ஶ்ரீ:

# பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ப்ரபவ-௵ சித்திரை-௴

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1927 | ஏப்ரல் | 13-௳ | சித்திரை | 1-௳ | பு. | த்வாதஶி; மேஷ ஸங்க்ரமணம் 29-53; |
| ,, | ,, | 17 | ,, | 5 | ஞா. | சித்ரா பூர்ணிமா. ஶ்ரீ மதுரகவிகள் திருநக்ஷத்ரம். |
| ,, | ,, | 27 | ,, | 15 | பு. | க்ருஷ்ண ஏகாதஶி திதி |
| ,, | ,, | 28 | ,, | 16 | வி. | த்வாதஶி திதி; ஏகாதஶீ வ்ரதம் |
| ,, | மே | 1 | ,, | 19 | ஞா. | அமாவாஸ்யை. |
| ,, | ,, | 3 | ,, | 21 | செ. | ஶுக்ல த்விதீயை, த்ருதீயை; திதி த்வயம். |
| ,, | ,, | 4 | ,, | 22 | பு. | அக்ஷய த்ருதீயை. |
| ,, | ,, | 5 | ,, | 23 | வி. | ஶ்ரீ பாஷ்யகாரருடைய திருநக்ஷத்ரம். |
| ,, | ,, | 9 | ,, | 27 | தி. | நவமி திதி. |
| ,, | ,, | 10 | ,, | 28 | செ. | அதிதி. |
| ,, | ,, | 12 | ,, | 30 | வி. | ஏகாதஶி வ்ரதம், ஏகாதஶி திதி. |
| ,, | ,, | 13 | ,, | 31 | வெ. | மேஷ ஶுக்ல த்வாதஶி திதி. |

ஸ்ரீ:

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, மதராஸ்.

**போஷகர்.**

*ராவ் ஸாஹிப் ஸ்ரீ உ.வே. பி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், டில்லி.*

**ஸபாத்யக்ஷர்.**

*கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீ. உ.வே. வ. வே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், சென்னை.*

**கார்யதர்சி.**

*ஸ்ரீ. உ.வே. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார், பி. ஏ., பி. எல், மயிலாப்பூர்.*

**உதவி கார்யதர்சி.**

*ஸ்ரீ. உ.வே. கே. டி. ஸுந்தர ராஜாசார்யர், பி. ஏ. எல். டி., சென்னை.*

---

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை.

*[ ஹிந்து மத விஷயமான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்ரிகை ]*

பத்ரிகை ஸம்பந்தங்களான கடிதங்கள், வ்யாஸங்கள் முதலியவை, 'ஸ்ரீ. வாஸுதேவாசார்யர், ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, மாம்பலம், மதராஸ்' என்னும் விலாஸத்திற்கு அனுப்பப்பட வேண்டும்,

பத்ரிகையின் சந்தா, அது ஸம்பந்தங்களான கடிதங்கள் முதலியவை, 'ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார், ஹைகோர்ட் வக்கீல், 5 வடவண்டை மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்' என்னும் விலாஸத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

மற்றைக் கடிதங்களெல்லாம், 'ஸ்ரீ. கே. டி. ஸுந்தர ராஜாசார்யர், பி. ஏ., எல். டி. 10, கச்சாலேசுவரர் அக்ரஹாரம், ஜியார்ஜ் டவுன், மதராஸ்' என்னும் விலாஸத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

---

இது, சென்னை, சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை காரியதரிசியால் வெளியிடப்படுவது.